
# தமிழரசு

1-1-1977 50 காசு.



Job 214

ASSISTANT WORKS MANAGER
TAMIL ARASU PRESS
GOVERNMENT ESTATE
MADRAS-600 002



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



# தமிழரசு

சுற்றுலாச் சிறப்பிதழ்

1—1—1977


மலர் : 7 இதழ் : 13

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| எழில்மிகு தமிழகம் காண வாரீர்! ... | 2 |
| மலை நகரங்களின் ராணி! ... | 5 |
| கலைமிளிரும் காஞ்சி காண வாரீர்! ... | 9 |
| திருச்சிராப்பள்ளி ... | 12 |
| இராமேஸ்வரம்-புனிதத் தீவு ... | 15 |
| வளம் கொழிக்கும் தஞ்சை ... | 17 |
| மகிழ்வு உலாச் செல்வோர் காணவேண்டிய மனோரா ... | 23 |
| மனங்கவர் மாமல்லபுரம் ... | 24 |
| கன்னியாகுமரி ... | 28 |
| எழில் கொஞ்சும் ஏர்க்காடு ... | 31 |
| ஒகேனக்கல் ... | 32 |
| மதுரை மாநகர் ... | 33 |
| தென்னாட்டின் இளவரசி! ... | 37 |
| கோவளம் கூறும் கதை! ... | 39 |
| கிழக்குக் கடற்கரையின் அரசி! ... | 41 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில்.. ... | 42 |
| மற்ற மாவட்டங்களில்.. ... | 43 |
| தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் (வரை படம்) ... | 44 |
| வனவிலங்கு ரசிகர்களுக்கு ... | 45 |


நன்றி: பொதுத் (சுற்றுலா) துறை,
சென்னை-600009.

அட்டைப்படம்
வெளிநாட்டவர்களை வியப்பிலாழ்த்தும்
மாமல்லை கடற்கரைக் கோயில்!



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் உள்ள இச்சிற்பம், தமிழ்நாட்டுச் சிற்பக்கலையின் சிறப்புக்கோர் எடுத்துக் காட்டாகும்



# எழில்மிகு தமிழகம் காண வாரீர்!

இந்தியாவின் முக்கிய சுற்றுலா மண்டலங்களில் ஒன்றாகத் தமிழ் நாடு விளங்குகிறது. எல்லாச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களையும் கவரக் கூடிய சுற்றுலாக் கவர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. தமிழ் நாட்டின் சுற்றுலாக் கவர்ச்சிகளை (1) கோயில் கட்டடக் கலை, சிற்பம், நினைவுச் சின்னப் பகுதி, (2) மலை நகரங்கள், (3) வனவிலங்குகள், (4) கடற்கரை மகிழ்விடங்கள் என வகைப்படுத்தலாம். இச்சுற்றுலாக் கவர்ச்சிகள் ஒவ்வொன்றும் அதனதன் வகையில் தனிச் சிறப்பு வாய்ந்தவை. கோயில் கலை, சிற்பம், நினைவுச் சின்னப் பகுதி ஆகியவை பல்லவ, சோழ, பாண்டிய மண்டலங்களிலேயே முக்கியமாக அமையப் பெற்றுள்ளன.

### கோயில் கலை

பல்லவ மண்டலத்தில், உலகப் புகழ் பெற்ற மாமல்லபுரம் சிற்பங்களும், இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் ஒன்றான காஞ்சிபுரமும், நீர் வாழ் பறவைகளின் சரணாலயங்களில் ஒன்றான வேடந்தாங்கலும், தென் இந்தியாவின் பெரு நகரங்களில் ஒன்றான சென்னையும் அடங்கியுள்ளன. சென்னை நகரை மையமாகக் கொண்டு, அங்கிருந்து இவ்விடங்களைச் சென்று காணலாம்.

திருச்சிராப்பள்ளி, தன்னகத்தே மலைக்கோயிலைக் கொண்டுள்ளதால் மங்காப் புகழ் பெற்று விளங்குகிறது. அதன் அருகில், ரெங்கநாத சுவாமி வீற்றிருக்கும் மிகப் பெரிய திருக்கோயில்களில் ஒன்றான ஸ்ரீரங்கம் கோயில் அமைந்துள்ளது.

காவிரியாற்றின் கழிமுகப் பகுதியில் உள்ள சோழ மண்டலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பரம், பூம்புகார் முதலியன உள்ளன. சோழர்களின் தலைநகரமாக விளங்கிய தஞ்சாவூர், கோயில் கட்டடக்



கலையின் அற்புதமாக விளங்கும் பிரகதீசுவரர் ஆலயத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதால், பெரும்புகழ் பெற்று விளங்குகிறது.

கங்கை கொண்ட சோழபுரம், சிவன் கோயில், கட்டடக் கலையின் சிறப்புக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாக இலங்குகிறது. காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ள பூம்புகார், சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைத்துள்ள புதியதோர் கவர்ச்சியாகும். அங்கு தமிழர்களின் தொன்மையான கலாச்சார பாரம்பரியத்திற்குப் புத்துயிர் ஊட்டப் பெற்றுள்ளது.

சோழ மண்டலத்தைக் கண்டு களிக்க, திருச்சிராப்பள்ளியிலிருந்து சுற்றுலாப் பயணத்தைத் துவக்கலாம்.

பாண்டிய மண்டலம், மதுரையிலுள்ள மீனாட்சிஅம்மன்கோயில், குற்றாலம் அருவி, உலகிலேயே மிக நீண்ட பிரகாரத்தைக் கொண்டு, இந்தியாவின் புகழ் பெற்ற புனித இடங்களில்ஒன்றாக விளங்கும் ராமேஸ்வரம், நிலப் பகுதியின் முடிவு எல்லையான கன்னியாகுமரி, மலைவாழ் இடங்களின் இளவரசி எனத் திகழும் கொடைக்கானல் ஆகியவற்றைக் கொண்டு சுற்றுலாப் பயணிகளை மகிழ்ச்சிக் கடலில் திளைக்கச் செய்கிறது. பாண்டிய மண்டலத்தைக் காண விரும்புவோர் மதுரையிலிருந்து பயணத்தைத் துவக்கலாம்.

இம்மூன்று மண்டலங்களும், ஒவ்வொரு வகையில் ஈடுஇணையற்ற சுற்றுலாக் கவர்ச்சிகளைக் கொண்டுள்ளன.

**மாமல்லையின் சிறப்பு**

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், உலகில் பல்வேறு இடங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும், மகிழ்விக்கும் கடற்கரைகளும் உள்ளன. அவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் காண முடியாது. ஆனால் மாமல்லபுரத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் எழில்மிகு கடற்கரை மகிழ்விடமும் ஒரே இடத்தில் அருகருகே அமைந்துள்ளன. மாமல்லபுரம் சென்னைக்கு அருகிலும் அமைந்துள்ளது. இது மாமல்லையின் மற்றொரு சிறப்பாகும்.

தஞ்சாவூரில் உள்ள பிரகதீசுவரர் ஆலயத்தின் பிரம்மாண்டமான அமைப்புக்கும், சிறப்புக்கும், கட்டடக் கலைக்கும் இணையான தொன்று வேறெங்கும் இல்லை!

மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் ஆலயமோ இந்தியாவில் உள்ள ஆலயங்களில் மிகப் பெரியவற்றில் ஒன்றாகும். மேலும், விரிவான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய, எண்ணற்ற, மிகப் பெரிய சிற்பங்களும் அவ்வாலயத்தில் உள்ளன!

கன்னியாகுமரியிலேயே, வங்காள விரிகுடா, அரபிக் கடல், இந்து மகா சமுத்திரம் ஆகிய முப்பெருங்கடலும் சங்கமமாகின்றன. இங்குதான் சுவாமி விவேகானந்தர், கடல் நடுவே அமைந்த பாறை மேல் தியானத்தில் அமர்ந்து ஞான ஒளி பெற்றார். இந்து மதத்தின் புனிதத் தன்மையையும், இந்தியாவின் பெருமையையும் உலகமெங்கும் பரவச் செய்த விவேகானந்தருக்கு கன்னியாகுமரியில் அப்பாறையின்மேல் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது இந்நினைவுச் சின்னத்தை காண நாடெங்கிலும் இருந்து நாள்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் வருகின்றனர்.


மேலும், உலகில் சிறந்தவை என்று சொல்லத் தக்க கடற்கரை மகிழ்விடங்கள் தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரையில் ராமேஸ்வரம், தேவிபட்டணம், வாலிநோக்கம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளது.

**மலை மகிழ்வு இடங்கள்**

தமிழ் நாட்டின் மூன்று முக்கிய மலை மகிழ்வு இடங்களாக ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவை விளங்குகின்றன. இமயமலையில்உள்ள மலை மகிழ்விடங்களைப் போலன்றி, தமிழ் நாட்டு மலை மகிழ்விடங்களில் ஆண்டு முழுவதும் தங்கி ஓய்வு எடுக்கலாம். பருவத்திற்குப் பருவம் மாறி மாறிக் காட்சி அளிக்கும் இயற்கையின் அழகைக் கண்டுகளிக்கலாம்!

**வனவிலங்குகள்**

சென்னைக்குத் தெற்கே 70 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வேடந்தாங்கல், இந்தியாவின் முக்கிய நீர்ப்பறவைச் சரணாலயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ஊட்டியிலிருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் மைசூர் செல்லும் வழியில் உள்ள முதுமலை, இந்திய தேசியச் சரணாலயங்களில் ஒன்றாக இலங்குகிறது. சென்னைக்கு அருகே கிண்டியில் உள்ள மான்கள் பூங்கா, கோயம்புத்தூருக்கு அருகே உள்ள ஆனைமலை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளகோடிக்கரை, திருநெல்வேலி மாவட்டத்



தென்காசி கோயிலில் உள்ள சிற்பம்

தில் உள்ள முண்டந்துறை ஆகியவை தமிழ் நாட்டின் இதர முக்கிய வன விலங்குச் சரணாலயங்களாகும். எண்ணற்ற தாவரங்களையும் கடல் வாழ் உயிரினங்களையும் கண்டு களிப்பதற்கு குருசடைத் தீவு ஏற்றது.

மேற்கூறிய மண்டலங்கள் ஒவ்வொன்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கு ஏற்ப ஒரு நாள் முதல் 5 நாள் வரையான சுற்றுலாப்பயணத்திற்குத் திட்டமிடுவதற்கு ஏற்றவையாகும். மாநிலம் முழுவதையும் பார்வையிடும் வகையில் ஒரு வாரம் முதல் 10 நாள் வரையான அல்லது 15 நாள் சுற்றுலாவையும் அமைத்திடமுடியும்.

**மேம்பாட்டுத் திட்டங்கள்**

சுற்றுலாத் துறையும், தமிழ் நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகமும் ஏற்படுத்தப்பட்டவுடன், தமிழ்நாட்டின் சுற்றுலா மேம்பாடு புதிய கட்டத்தை அடைந்துள்ளது. சுற்றுலா இடங்களைத் தெரிந்தெடுத்து, அவைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலாப்பயணிகளுக்குரியவிளக்கக் கையேடுகள், படச் சுருள்கள் முதலியவற்றையும்,மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பணிகளைச் செய்வது சுற்றுலாத் துறையின் பொறுப்பாகும். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உணவு மற்றும் தங்கும் வசதிகளைச் செய்தல், மாநிலமெங்கும் கட்டுக்கோப்பான சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்தல் போன்ற வாணிப அடிப்படையான பணிகளைத் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் கவனித்து வருகிறது.

யு. என். டி. பி.குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப மாமல்லபுரத்தை அயல்நாட்டினர் தங்குவதற்கேற்ற வசதிகளுடன் கூடிய கடற்கரை மகிழ்வு இடமாக மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. ராமேஸ்வரமும், கன்னியாகுமரியும் புனிதப் பயண இடங்களாக இருப்பதுடன், மேம்பாடு செய்ய வேண்டிய கடற்கரை மகிழ்விடங்களாகவும் உள்ளன.

தமிழ்நாட்டின் மலைமகிழ்வு இடங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவற்றை மேம்படுத்தவும், அழகுபடுத்தவும் திட்டங்கள் தீட்டப்பெற்று, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளுக்குரிய தங்குமிட வசதியைப் பொறுத்தவரையில், 1970-ஆம் ஆண்டில் இருந்த வசதியுடன் தற்பொழுதுள்ள வசதியை ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ்நாடு இன்று நிறைவான நிலையில் உள்ளது. மத்திய, மாநில அரசுகளால் அளிக்கப்பட்ட உதவிகளைத் தனிப்பட்ட தொழில் ஆர்வலர்கள் பலர் பயன்படுத்திக் கொண்டனர். அதன் பயனாக இன்று சென்னையில் ஐந்து, நான்கு, மூன்று மற்றும் இதர நட்சத்திர ஹோட்டல்கள் பல உள்ளன. மாநாடு நடத்துவதற்கான வசதிகள்-அனைத்து நாட்டுத் தர அளவில்-சென்னை, மதுரை, ஊட்டி ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கொடைக்கானல், ஏர்க்காடு முதலிய இதர முக்கிய நகரங்களிலும் அநேக நட்சத்திர ஹோட்டல்கள் தோன்றியுள்ளன.

கடற்கரை ஓட்டல்கள் பல (Beach Resorts) மாமல்லபுரத்தில் உள்ளன.


தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் திருச்சிராப்பள்ளி, மதுரை, கன்னியாகுமரி, கொடைக்கானல், ஏர்க்காடு, ஊட்டி, திருச்செந்தூர், ராமேஸ்வரம், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது. அம் மாளிகைகளில், நடுத்தரமான கட்டணத்தில் தங்குமிட வசதி அளிக்கப்படுகிறது.

**போக்குவரத்து வசதிகள்**

தமிழ்நாட்டில் தற்பொழுது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் விமான நிலையங்கள் உள்ளன. இவைகளில் சென்னை விமான நிலையம் அனைத்து நாட்டு விமான நிலையமாகும். இந்நிலையத்தில் 'ஏர் இந்தியா', 'இந்தியன் ஏர்லைன்ஸ்', 'சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்', 'மலேசியன் ஏர்லைன்ஸ்' 'ஏர்சிலோன்' ஆகியவற்றின் விமானங்கள் வந்திறங்குகின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவின் பிற மாநிலச் சுற்றுலாப் பயணிகளும் தமிழகத்திற்கு வருகை தர மேற்கூறிய 4 விமான நிலையங்களும் பயன்படும்.

தமிழ்நாட்டில் நல்ல சாலை வசதிகள் உள்ளன. எல்லா முக்கிய நகரங்களையும் இணைக்கும் வகையில் விரைவுப் பேருந்துகள் இரவும் பகலும் செல்கின்றன.

எனவே, தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணம் மேற்கொண்டு, காலத்தால் அழியாத கற்சிற்பங்களையும், கலைக் கோயில்களையும், வரலாற்றுச் சின்னங்களையும், உலகத்தில் வேறெங்கும் காண முடியாத எழில்குலுங்கும் மகிழ்வுக் கடற்கரைகளையும், கண்டவர் வியந்திடும் மலைமகிழ்வு இடங்களையும் கண்டு களித்திட வாரீர் என்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும், இந்தியாவின் பிற மாநிலச் சுற்றுலாப் பயணிகளையும் தமிழகத்திற்கே உரிய விருந்தோம்பும் பண்புடன் வருக, வருக என வரவேற்கின்றோம். அதேபோல், தமிழக மக்களையும் தமிழ்நாட்டில் உள்நாட்டுச் சுற்றுலா மேற்கொண்டு பெரும் பயன் அடையும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.


ஆளியாறு அணை

# மலைநகரங்களின் ராணி



இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் உள்ள மற்றெல்லா மலைநகரங்களையும் விட நீலகிரி மலையில் உள்ள உதகமண்டலம் இணையற்றதாகும். உதகமண்டலத்தைக் காண விரும்பும் ஒருவர், நீலகிரி மலையின் அடிவாரத்திலுள்ள மேட்டுப் பாளையத்திலிருந்து தம் சுற்றுலாப் பயணத்தைத் துவக்கினால், அவர் உதக மண்டலம் செல்வதற்குள்—பூமத்திய ரேகை நாடுகளில் தொடங்கி துந்திரப் பிரதேசம் வரையான நாடுகளில் பயணம் செய்யும் மற்றொருவர் காணக்கூடிய—அதே சீதோஷ்ண நிலையையும், எண்ணற்ற வண்ண வண்ணத் தாவர வகைகளையும் கண்டு களித்திடவும், அத்தாவரங்களின் காய்களையும் கனிகளையும் உண்டு களித்திடவும் முடியும்.

மேட்டுப்பாளையத்தை அடுத்து, கல்லார், பரளியாறு ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைத் துறையின் பழத் தோட்டங்கள் சுற்றுலாப் பயணிகளை வரவேற்று வெளிநாட்டுப் பழங்களை வழங்குகின்றன. மேலே செல்லச் செல்ல, வெப்பம் குறைந்து, குளிர்ச்சி அதிகமாகிக் கொண்டே செல்வதையும், தாவரங்களின் தோற்றத்தில் காணப்படும் மாற்றங்களையும் கண்டு களிக்கலாம். கூனூர்,


அடையும்போது மித சீதோஷ்ண நாடுகளில் உள்ளது போன்ற நிலையை உணர முடிகிறது. மித சீதோஷ்ண நாடுகளில் காணப்படும் தாவரங்களையும், காய்களையும், கனிகளையும் கூனூர் சிம்ஸ் பூங்காவின் அருகில் உள்ள வேளாண்மைத் துறையின் பழத் தோட்டங்களில் கண்டு களிப்

பதுடன் விலைக்கு வாங்கி உண்டு மகிழ்ந்திடவும் முடியும்.

அடுத்து, உதகமண்டலத்தை நோக்கிச் செல்லும் போது தூந்திரப் பிரதேசங்களில் பயணம் செய்வது போன்ற பிரமை ஏற்படுகிறது. ஊட்டியின் குளுமையும், அங்கு கிடைக்கும் 'ப்ளம்' பேரி, ஸ்ட்ராபெரி, 'பீச்சஸ்' போன்ற பழங்களும் நாம் இங்கிலாந்து போன்ற குளிர்ச்சியான நாடுகளில் உள்ளது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. உதகமண்டலத்திற்குச் சுற்றுலாப் பயணம் செல்வதானது, பூமத்திய ரேகையிலிருந்து தூந்திரப் பிரதேசத்திற்குச் சுற்றுலாச் செல்வது போன்றதாகும். எனவேதான், உதகமண்டலத்தின் சிறப்பை உணர்ந்த ஆங்கிலேயர், உதகமண்டலத்தை 'மலைநகரங்களின் ராணி' (The Queen of Hill Stations) என்று கூறினர்.


இத்தகைய சிறப்பு வாய்ந்த மலைநகன்ரப் பெற்றுள்ள நீலகிரி மலையை ஆங்கிலத்திலே நீல்கிரி (The Nilgiri Hills) என்று அழைக்கப்படுகிறது.

நீலகிரி அல்லது நீலமலை (Blue mountain) என்றழைக்கப்படுவதே சரியானதாகும். ஒருங்கிணைந்த மேட்டு நிலப் பகுதியின் ஒரு பகுதியாக விளங்கிடும் நீலகிரி, 35 மைல்கள் அகலமும், 6,500 அடி உயரமும் கொண்டது. இது




ஊட்டியில் உள்ள ஏரி உல்லாசப் பயணிகளின் சொர்க்கம்!

ஊட்டி ஏரியின் அருகிலே உல்லாசக் குதிரைச் சவாரி!



கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சந்திப்பில் அமைந்து உள்ளது. ஏறத்தாழ 850 ஆண்டுகளாக 'நீலகிரி மலை' என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பகுதி, முழுதும் நீல வண்ண ஆவியால் மூடப்பட்டுக் காணப்படுவதால் இப்பகுதி வாழ் மக்களால் இந்தப் பெயர் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

'மலை இருப்பிடங்களின் ராணி' என்ற சிறப்புப் பெயரைப் பெற்று விளங்குகின்ற உதகமண்டலமும் இங்கேதான் அமைந்துள்ளது. இதுவே தமிழகத்தின் முதன்மையான மலை இருப்பிடமாகத் திகழ்கிறது. தலைசிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கிடும் இதனைப் பொது மக்கள், 'ஊட்டி' என்று செல்லமாக அழைக்கின்றனர். வண்ண மலர்களின் புகலிடமாகவும் ஊட்டி திகழ்கிறது. இதற்கு மிக அருகில் கோத்தகிரி, கூனூர் ஆகிய இரு சிறிய மலை இருப்பிடங்களும் உள்ளன. இவைகளும் சிறந்த சுற்றுலாத் தலங்களாகவும் விளங்குகின்றன.



வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கும் தாவர இயல் பூங்கா

கண்ணுக்கு இனிய விருந்தினை அளித்திடவும், மனத்துக்கு மெத்த மகிழ்ச்சியினை ஊட்டிடவும், சுற்றுலாப் பயணிகளுக்குச் சுகத்தினை வழங்கிடவும் ஏற்ற வகையில் பல்வேறு இடங்கள் இப் பகுதியில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் சுற்றுலா வருவோரின் கவனத்தை ஈர்ப்பதாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

**காணத்தக்க கவர்ச்சி இடங்கள்**

மலைச் சிகரங்களில் மிகவும் உயரமானதாகத் திகழ்கின்ற 'தொட்டபெட்டா' சிகரமும் இங்கே தான் உள்ளது. இதன் உயரம் 2,633 மீட்டர்களாகும். இது சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கத் தகுந்த இடமாகும்.

இது தவிர, இயற்கை எழில் சூழ்ந்த 'மிகப் பெரிய ஏரி' ஒன்றும் உள்ளது. 'படகுச் சவாரி' இந்த ஏரியின் சிறப்பு அம்சம் ஆகும்.

அழகு கொஞ்சும் அற்புத தாவரயியல் பூங்கா' (Botanical Garden) ஒன்றும் உள்ளது. எத்தனை எத்தனை மலர்கள் இங்கே...! ஆயிரக்கணக்கில் வண்ணமலர்களைக் காணலாம் இங்கே!

செழுமை கொஞ்சும் 'இந்திய-ஜெர்மானிய கூட்டுறவு வேளாண்மைத் திட்டப் பண்ணை', அனைவரையும் கவருகின்ற தேயிலை மற்றும் காப்பித் தோட்டங்கள் ஆகியவைகளும் காணத் தக்கவைகளாகத் திகழ்கின்றன. இவை அனைத்தும் ஊட்டியின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. நீலகிரி மாவட்டத்தின் முக்கிய வாணிபப் பயிராக விளங்குவது உருளைக் கிழங்கு.

ஊட்டியின் சுற்றுப் புறப் பகுதியில் அமைந்துள்ள கெய்ரன்மலை, முகர்த்தி சிகரம், பைக்காரா அணை போன்றவைகள் மகிழ்வுலாச் செல்வோரை வரவேற்கும் இடங்களாக அமைந்துள்ளன.

தமிழகத்தின் தலைசிறந்த வன விலங்கு உய்விடமான முதுமலையும் இம்மாவட்டத்தில்தான் அமைந்துள்ளது. இந்தியாவிலேயே, மிகப் பெரிய காட்டெருமைக் கூட்டத்தினை இந்த உய்விடத்தில்தான் நாம் காணலாம். ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் சாலையில் 67 கிலோ மீட்டர் தொலைவில் முதுமலை அமைந்து உள்ளது.

'சிம்ஸ் பூங்கா', 'லாம்ஸ்' பாறை, கேன்னிங்ஸ் சீமாட்டி இருப்பிடம் (Lady Canning's Seat) 'டால்பின்ஸ் நோஸ்', 'ராலியா' அணை, 'லாஸ்' அருவி ஆகியவை கூனூரில் காணப்படும் கவர்ச்சியான இடங்களாகும். கொடநாடு காணும் இடம், தூய காதரின் அருவி, ரங்கசாமி தூண் மற்றும் பாறை ஆகியவை கோத்தகிரியில் காணப்படும் கவர்ச்சி மிகு இடங்களாகும்.

'இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம்' தொழிற்சாலையும் உதக மண்டலத்தில்தான் நிறுவப்பெற்றுள்ளது. மிகப் பழைமை வாய்ந்த தோடர், கோதர், குறும்பர், பனியர் ஆகிய மலைவாழ் பழங்குடி இனத்தவர்களைக் கொண்ட பெருமைக்குரிய மாவட்டம் நீலகிரிதான். தோடர்களின் வசிப்பிடம் காண்பதற்குக் கவர்ச்சியான தோற்றம் உடையதாகும்.

இத்தகு சிறப்புக்களைப் பெற்று உள்ள கவர்ச்சி மிகு இடங்களுக்கெல்லாம் பயணிகள் செல்வதற்குச் சீரான போக்குவரத்து வசதிகள் அமைந்துள்ளன.


உதகமண்டலத்திற்கு அருகில் உள்ள விமான நிலையம் கோயம்புத்தூர் ஆகும். கோவை, ஊட்டியிலிருந்து 89 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னை, பெங்களூர், கொச்சி போன்ற விமான நிலையங்களிலிருந்தும் இந்தியன் ஏர்லைன்ஸ் மூலம் கோயம்புத்தூருக்குச் செல்லலாம்.



உதகையின் குளுமையில் உல்லாசம் காணும் குழந்தைகள்!


ஊட்டி, கூனூர் போன்றவை மலைப்பாதை ரயில் பாதையில் இணைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வழியாகச் செல்லலாம். எல்லா முக்கிய நகரங்களையும் இந்த ரயில் பாதை இணைக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு மலையினூடே ரயிலில் பயணம் செய்வது வாழ்க்கையில் மறக்க முடியாத ஓர் அனுபவம் ஆகும்.

ஊட்டி, கூனூர், கோத்தகிரி ஆகியவை முக்கிய நகரங்களின் சாலைப் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர், சென்னை, பெங்களூர், கோழிக்கோடு போன்ற நகரங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் சிறப்பாக அமைந்துள்ளன. வாடகைக் கார்கள் வசதியும் உள்ளன.



இந்தச் சுற்றுலாத் தலங்களுக்கு வருகின்ற பயணிகள் வசதியுடன் தங்கித் தங்கள் பொழுதினை உல்லாசமாகக் கழித்திடுவதற்கும் ஏராளமான தங்குமிடங்களும் உள்ளன. தமிழ்நாடு அரசினுடைய 'தமிழகம்' ஊட்டியின் சிறப்பு மிக்க தங்குமிடமாகும். தவிர, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 'சுற்றுலா மாளிகை', பொதுப் பணித்துறையினுடைய 'பயணிகள் விடுதி' போன்றவைகளும் சிறப்பு மிக்க தங்குமிடங்களாகத் திகழ்கின்றன. தவிர, பல்வேறு தனியார்களின் தங்குமிடங்களும் இந்த இடங்களில் ஏற்படுத்தப் பெற்று உள்ளன.

'மலை இருப்பிடங்களின் ராணி'யான ஊட்டியையும், இங்குள்ள அழகு மிக்க இடங்களையும் ஒவ்வொருவரும் கண்டு களிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.



# கலைமிளிரும் காஞ்சி காணவாரீர்!

**கா**ஞ்சிபுரம்—கோயில்கள் பல நிறைந்த ஒரு பொன்னகரமாகும். பல்லவ மன்னர்களின் எழில் வாய்ந்த தலைநகராகவும் காஞ்சி விளங்கியது. கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு வரையில் பல்லவர்களின் ஆளுகையில் இது இருந்து வந்தது. பின்னர் சோழர், விஜய நகர மன்னர்கள், மொகலாயர்கள், ஆங்கிலேயர் போன்றோரின் ஆதிக்கத்திலும் இருந்தது. இங்கே தான் ஆதி சங்கராச்சாரியார் அவர்கள், 'காமகோடி பீடம்' எனப்படும் தமது சமய வட்ட இருக்கையினை நிறுவினர். பழைய காஞ்சி பல தரப்பட்ட பண்பாடுகள் கலந்துறவாடும் இடமாகவும் அமைந்திருந்தது.

சிற்பக் கலைத் துறையிலுங்கூட காஞ்சிபுரம் ஈடு இணையற்ற தன்மையினைப் பெற்று விளங்கியது. எழில் கொஞ்சும் சிற்பக் கலைகளுடன் புகழ் வாய்ந்த கோயில்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் கோயில் சிற்பக் கலை குறித்த விரிவான ஆராய்ச்சியினை நடத்த விரும்புகின்றவர்களுக்கு இந்த நகரம் சீரிய வாய்ப்புக்கள் பலவற்றையும் தந்துதவுகிறது.


இத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சியில் சுற்றுலாப் பயணிகள் கண்டு களித்து .பயன்கள் பல பெற்றிட ஏராளமான இடங்கள் உள்ளன. இவைகளில் ஆலயங்கள் சிறந்த இடத்தைப் பெற்று உள்ளன. ஏராளமான கோயில்கள் இந்நகரில் உள்ளன. அவைகளுள் மிகவும் முக்கியமானவை : வைகுண்டப் பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில், ஏகாம்பரேசுவரர் கோயில், வரதராசர் கோயில் ஆகியவைகளாகும்.

## வைகுண்டப் பெருமாள் கோயில்

இந்தியாவில், முக்கியத்துவம் வாய்ந்த 18 விஷ்ணு கோயில்களில் இதுவும் ஒன்று. காஞ்சிபுரம் கிழக்கு ராஜ வீதியின் அருகே இது அமைந்துள்ளது. கி.பி. 7 -ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னரான பரமேசுவர வர்மனால் இது கட்டப்பட்டது. இக்கோயிலில் ஏராளமான கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கலையழகு மிக்க கைலாசநாதர் கோயில்





ஏகாம்பரேசுவரர் கோயில்

### கைலாசநாதர் கோயில்

ராஜசிம்மன் என்னும் பல்லவ மன்னனால் இது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்தக் கோயில் சிற்பக் கலை, கட்டடக் கலை ஆகியவைகளுக்கு மிகவும் புகழ் பெற்றதாகும்.

### ஏகாம்பரேசுவரர் கோயில்

மிகவும் பழமைவாய்ந்த கோயிலாகும். தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களால் சீரிய பராமரிப்பினைப் பெற்று வந்த பெருமை படைத்தது இக்கோயில். பார்வதி இங்கே தவம் புரிந்தபொழுது, சிவன், 'ஏகாம்பரா' என்னும் தனியான மாமரத்தின் அடியில் தோன்றி பார்வதியை ஆசீர்வதித்ததாகப் புராணம் கூறுகிறது. கோயிலின் உட்புறத்திலே மாமரம் ஒன்று உள்ளது. இது ஏறத்தாழ 2,500 ஆண்டுகள் வயதுடையது எனச் சொல்லப்படுகின்றது. இங்கே ஐந்து பிரகாரங்கள் உள்ளன. அழகு வாய்ந்த ஆயிரங்கால் மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளது. இக்கோயிலின் தெற்குக் கோபுரம் 188 அடி உயரமுடையது. தென்னிந்தியாவின் மிகப் பெரியதும், உயரமானதுமான கோபுரங்களில் இதுவும் ஒன்றாகும். விஜய நகர மன்னர்களால் 16-ஆம் நூற்றாண்டில் இந்தக் கோயில் கட்டப்பட்டது. 'பிருதிவி லிங்கம்' தான் இந்தக் கோயிலின் முதன்மைத் தெய்வமாகும். பிருதிவி லிங்கம் என்பதற்கு 'மண்' என்று பொருள். சிவ பெருமான், புவியிலுள்ள பஞ்ச பூதங்களின் மூலமாகவும் வழிபடப்படுகிறார். அதாவது மண், விண், நீர், நெருப்பு, காற்று ஆகிய பஞ்ச பூதங்கள் வாயிலாக வணங்கப்படுகிறார்.

### வரதராசர் கோயில்

மிகப் பெரியதாகவும், உளத்தைக் கவரக் கூடியதாகவும் விளங்கும் இது மிகப்பழமையான மற்றொரு கோயிலாகும். இந்தக் கோயிலில் மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு கம்பீரமான கோபுரங்கள் உள்ளன. இங்குள்ள 100 தூண்கள் கொண்ட மண்டபம் முழுதும் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்களைக் கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் விஜயநகர மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டவைகளாகும்.


### காமாட்சி கோயில்

இந்தியாவில் சக்தியை வழிபடுகின்ற புண்ணியக் கோயில்கள் மூன்று உள்ளன. அவைகளில் காமாட்சி கோயிலும் ஒன்றாகத் திகழ்கின்றது. மற்ற இரண்டு புண்ணியக் கோயில்கள் மதுரையிலும், வாரணாசியிலும் உள்ளன. தற்போதுள்ள அமைப்பில் இந்தக் கோயிலை 14-ஆம் நூற்றாண்டில் சோழர்கள் கட்டினார்கள்.


### சாக்கீஸ்வரர் கோயில்

புகழ் பெற்ற இந்தக் கோயிலும் சோழர்களால் கட்டப்பட்டதே. பல்லவர்களை வெற்றி கண்ட சோழர்கள், பல்லவர்களின் மரபினைத் தொடர்ந்ததோடு இக்கோயிலின் மதிப்பினையும் உயர்த்திக் காட்டினார்கள். இது காமாட்சி அம்மன் கோயில் அருகிலேயே அமைந்துள்ளது.

வரதராஜப் பெருமாள் கோயில்







கண்ணைக் கவரும் வண்ண வண்ண பட்டுப் புடவைகள் காஞ்சிபுரத்தில் தயாராகின்றன!

## கைத்தறித் தொழில்

நெசவுத் தொழிலுக்குப்பெயர் பெற்றது 'காஞ்சி. இந்தியாவிலேயே சிறந்த ரகப் பட்டுப் புடவைகள் இங்கேதான் நெய்யப்படுகின்றன. எண்ணற்ற உயர் வண்ணங்களையும், தரமான சரிகைகளையும் கொண்ட உயர்ந்த ரகப் பட்டுப் புடவைகள் காஞ்சிபுரத்திற்குப் பெருமை சேர்க்கின்றன. இங்கே கால வரம்பற்ற கைத்தறித் தொழிலும் வளர்ச்சி பெற்று வருகிறது. காஞ்சிபுரத்தில் நேர்த்தியான இந்தப் பட்டுப் புடவைகள் மாறுபட்ட வண்ணங்களில் தூய 'மல்பெரி' பட்டினால் நெய்யப்படுபவைகளாகும். பளபளப்பு, நீடித்த உழைப்பு, நெய்திறன் போன்றவைகளில் பொருமையுறத் தக்க மதிப்பினையும் பெற்றுள்ளன. செயற்கைமுறைத் துணிகள் உள்ளடங்கிய எந்த நெசவுத் துணிகளும் இவைகளுக்கு ஈடாகா. இங்கே ஏறத்தாழ 5,000 குடும்பத்தினர் நெசவுத் தொழிலை மேற்கொண்டு தங்களுடைய தறிகளின் மூலம் கண்கவர் வண்ணப் படைப்புக்களைத் தயாரிக்கின்றனர். இவைகள் இங்குள்ள ஏராளமான கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனையாகின்றன.

## போக்குவரத்து வசதிகள்

**விமான நிலையம்** : மீனம்பாக்கம், சென்னை.

**புகைவண்டி நிலையம்** : காஞ்சிபுரம். செங்கற்பட்டு—அரக்கோணம், புகைவண்டிப் பாதையில் உள்ளது. சென்னையிலிருந்து செங்கற்பட்டு வழியாகப் புகைவண்டியில் காஞ்சிபுரம் செல்லலாம்.

**சாலை** : எல்லா முக்கிய நகரங்களுடனும் சாலைகள் மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து 77 கிலோ மீட்டர், செங்கற்பட்டிலிருந்து 35 கிலோ மீட்டர், மாமல்லபுரத்திலிருந்து 65 கிலோ மீட்டர், வேலூரிலிருந்து 64 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள காஞ்சிபுரத்திற்குப் பேருந்துகள் அடிக்கடி உள்ளன. சென்னையிலிருந்து காஞ்சிபுரம், மாமல்லபுரம், வேடந்தாங்கல் ஆகிய இடங்களுக்குச் செல்ல ஒரு நாள் பயணம் மேற்கொள்வதற்கு வசதியாகச் சென்னையில் சுற்றுலா வாடகைக் கார்கள் மற்றும் வாடகைக் கார்கள் கிடைக்கின்றன.

## தங்கும் வசதிகள்

இந்திய சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் சுற்றுலா மாளிகை, காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்திற்கு அருகில் 78: காஞ்சி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ளது. வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் இச் சுற்றுலா மாளிகையில் தங்கலாம். இங்கு மேல்நாட்டு உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

உள் நாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ற லாட்ஜுகள் காஞ்சிபுரத்தில் ஏராளமாக உள்ளன. நகராட்சி ஓய்வு இல்லம் ஒன்றும் காஞ்சியில் உள்ளது. குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கு ஏற்ற சத்திரங்களும் உள்ளன.

## அருகிலுள்ள சுற்றுலாத் தலங்கள்

**திருப்பருத்திக்குன்றம்** : வேகவதி நதியின் தெற்குக் கரைப் பகுதியில் அமைந்துள்ள இது, காஞ்சிபுரத்தின் ஒரு புற நகராகும். சமண மதத்தின் சிறப்பு வாய்ந்த பெரிய தலமாகவும் விளங்குகிறது. இங்கேயுள்ள ஜினக்காஞ்சி கோயில் ஈடு இணையற்றதாக விளங்குவதோடு பல்வேறு கோபுரங்களையும். கொண்டுள்ளது. இவைகள் அனைத்தும் பல்லவர், சோழர் மற்றும் விஜய நகர மன்னர்களின் கலை அம்சங்களோடு விளங்குகின்றன.

## வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம்

காஞ்சிபுரத்திலிருந்து 62 கி.மீ. தொலைவில் மாமல்லபுரம் செல்லும் வழியில் உள்ளது. இந்தியாவிலுள்ள முக்கியமான தேசியப் பறவைகள் உய்விடங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கிறது. நவம்பர் திங்கள் முதல் பிப்ரவரி திங்கள் வரை பறவைகள் இங்கே காணப்படுகின்றன. வேடந்தாங்கல் சென்னையிலிருந்து தெற்கே 83 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.



# திருச்சிராப்பள்ளி

சென்னையிலிருந்து 320 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருச்சி, பழங்கால காவிரி டெல்டாப் பகுதி நகராகும். 18-ஆம் நூற்றுண்டின் போது நடைபெற்ற கருநாடகப் போரில் திருச்சி ஒரு செயற்களமாகவே விளங்கியது. இந்தப் போர்களில் மலைக்கோட்டை குறிப்பிடத்தக்க அளவில் பங்கேற்றிருந்தது. இதனுடைய வரலாற்றிலே முகம்மது அலி, சந்தா சாகிப், ராபர்ட் கிளைவ் போன்ற பெருமை படைத்தவர்கள் பங்கேற்றிருந்தார்கள். இதனுடைய வரலாற்றின் சிறப்பு மிக்க அத்தியாயங்கள் மதுரை நாயக்கர்களால் எழுதப்பட்டவையாகும். திருச்சி நகரமும், மலைக்கோட்டையும் மதுரை நாயக்கர்களால் நிறுவப்பட்டவைகளே. இன்று திருச்சி, வரலாற்றிலே இணைக்கப்பட்டு, வழி வழி மரபான யாத்திரைத் தலைமாகவும், வளமான வாணிக நகராகவும் விளங்குகிறது.


**காணத் தக்க இடங்கள்**

**மலைக்கோட்டை :** அடித்தளத்திலிருந்து இம்மலை ஏறத்தாழ 83 மீட்டர் உயரமுள்ளது. வளமான பகுதி இந்நிலப்பரப்பினை அழகுபடுத்துகிறது. 344 படிகளைக் கொண்ட பாதை, விநாயகரைத் தொழச் செல்லுபவர்களை அழைத்துச் செல்கிறது. வழியில் அமைந்துள்ள நூறு கால் மண்டபம் இன்றும் விழா போன்றவைகளை நடத்துவதற்குப் பயன்பட்டு வருகின்றது. கி.பி. 6, 7-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்ட இரண்டு குகைக் கோயில்கள், சிற்பங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. பாதி வழியில் தாயுமானவ சுவாமிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டு உள்ள சிவன் கோயில் ஒன்றும் உள்ளது. மலைக்கு அடியில்தான் கோயில் குளம் உள்ளது. இதற்கு அருகே உள்ள வீடு ஒன்றில்தான் ராபர்ட் கிளைவ் வசித்து வந்தார்.

**ஸ்ரீரங்கம்**

இது 15 கி.மீட்டர் அகலமும், 40 கி.மீட்டர் நீளமும் கொண்ட

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக விளங்குகிறது கல்லணை



ஒரு சிறிய தீவாகும். ஏறத்தாழ 600 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட மிகப் பெரிய கோயிலாகத் திகழும் இதில் 21 கோபுரங்கள் உள்ளன. விஷ்ணுவுக்காகவே கி.பி. 13, 14-ஆம் நூற்ருண்டில் இக்கோயில் கட்டப்பட்டதாகும்.

நகரைச் சுற்றியே இக்கோயிலின் சுவர்கள் அமைந்துள்ளன. திருச்சியிலிருந்து 4 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இக்கோயில் சேரர், சோழர், பாண்டியர் மற்றும் மதுரை நாயக்கர் போன்ருேரின் பராமரிப்பில் இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிறந்த யாத்திரைத் தலமாக விளங்கும் இக்கோயிலின் ஆண்டுத் திருவிழா வைகுண்ட ஏகாதசியின் போது நடைபெறும். டிசம்பர் திங்கள் கடைசி வாரத்திலிருந்து ஜனவரித் திங்கள் இரண்டாம் வாரம் வரை, ஏறத்தாழ 20 நாட்கள் இவ்விழா நடைபெறும்.



தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபதிப்பாக விளங்கும் கங்கைகொண்ட சோழபுரம் கோயில்

## திருவானைக்காவல்


ஜம்புகேஸ்வரர் கோயில் என இங்குள்ள திருக்கோயில் வழங்கப்படுகிறது. ஜம்பு எனப்படுவது ஒரு புனிதமான மரமாகும். இந்த மரத்தின் கீழேதான் சிவபெருமான் இருந்துள்ளார். இம்மரத்தின் கீழே சிவனுடைய அடையாளமான சிவலிங்கம் காணப்படுகிறது. சிவலிங்கம் நீரில் மூழ்கிக் காணப்படும். புராண காலத்தில் யானை ஒன்று இக்கோயிலின் லிங்கத்தை வழிபட்டு வந்ததனாலேயே 'திரு ஆனைக் காவல்' என்றும் வழங்கப்பட்டு வந்தது. கண்ணுக்கு விருந்தளிக்கும் உயர்ந்த சிற்பங்கள் பலவற்றை இக்கோயிலில் காணலாம்.

## சுற்றுலாத் தலங்கள்


**கல்லணை** : இந்த அணைக்கட்டு சோழ மன்னர்களில் சிறப்புற்று விளங்கிய கரிகால் சோழனின் தொழில் நுட்பத் திறமையால் காவிரி நதியின் குறுக்கே கி.பி. 1-ஆம் நூற்ருண்டில் கட்டப்பட்டது ஆகும். அழகும் அமைதியும் பெற்றுச் சுற்றுலாவுக்குச் சிறந்த இடமாக விளங்கும் இங்கே சுற்றுலாப் பயணிகள் ஒரு நாள் தங்கி, தங்களுடைய பொழுதினை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம். திருச்சி, தஞ்சைச் சாலையில், திருச்சியிலிருந்து 19 கி.மீட்டர் தொலைவில் இந்த அணைக்கட்டு உள்ளது.

## கங்கை கொண்ட சோழபுரம்

இங்கே ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட பிரகதீசுவரர் ஆலயம் தஞ்சாவூரில் உள்ளகோயிலின் மறுபதிப்பாக, தரமுடன் திகழ்கிறது. இக்கோயில் தனக்கே உரிய அழகினையும், கவர்ச்சியையும் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலை நிர்மாணித்த ராஜேந்திர சோழனுக்கு சிவனும் பார்வதியும் மலர்க் கிரீடம் சூட்டுவதுபோல் அமைந்துள்ள சிற்பம் இங்கேயுள்ள சிற்பங்களிலே மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். நடராஜர் சிலையும், நடனமாடும் கணேசருடைய சிலையும் அழகு வாய்ந்ததாகத் திகழ்கின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தை அரியலூர், ஜெயங்கொண்டம் வழியாக அடையலாம். தஞ்சையிலிருந்து 71 கி.மீட்டர் தொலைவில் உள்ள இதனை கும்பகோணம் கீழ் அணைக்கட்டு வழியாகவும் அடையலாம்.







# கலை எழில் துலங்கும் கண்கவர் ஆடைகளை வழங்குவது கோ-ஆப்டெக்ஸ்

ஒவ்வொரு விழாக்காலத்திலும் கோ-ஆப்டெக்ஸ் எழில் வண்ணத் துணிகளை அளித்துவருகிறது. இனித்திடும் இப்பொங்கல் விழாவுக்கும் அப்படியே வண்ணமயமான ஏராளத் துணி வகைகள் புதிதாக வந்துள்ளன! உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கிறது கோ-ஆப்டெக்ஸ்.

சேலைகள்— யமுனா, அஜந்தா, சாமுண்டி

பிரிண்டட் சேலைகள். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள். உறையூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, பரமக்குடி, மதுரை கைத்தறி நூல் சேலைகள். சுங்கடி பிரிண்டுகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.

வேட்டிகள்


துவாலைகள் — டர்கிஷ் மற்றும் சாதா வகைகள். மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் ரகங்கள்.

படுக்கை விரிப்புகள் — நவீன வடிவங்களில் நேர்த்தியான நெசவு, மற்றும் தலையணை உறைகள்.

லுங்கிகள்— கோடிட்ட மற்றும் கட்டமிட்ட பல வகைகள்.

அலங்காரத் துணிகள் மற்றும் உடுப்புகளுக்கான துணிகள்

சம்பளம் பெறுவோருக்கு வழக்கம்போல் கடன் வசதி உண்டு




20-1-1977 வரை

பொங்கல் சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

20-1-77 வரை ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் விற்பனை உண்டு



# இராமேஸ்வரம்—புனிதத்தீவு

தென் பகுதிக் காசி என இந்துக்களால் கருதப்படும் இராமேஸ்வரம் தீவு—இராமாயணமாம் இதிகாசத்திலேயே சிறப்பிடம் பெற்ற பகுதியாகும்.

இலங்கையில் செய்த யுத்தத்திற்குப் பின்னர், இராமபிரான் இந்த இடத்திற்கு வந்து சிவபெருமானை வணங்கியதாகச் சொல்லப்படுகிறது. இதனுல், சைவர்களும், வைணவர்களும் இதனைப் புனிதமான இடமாகக் கருதுகிருர்கள்.

ஓர் இலிங்கத்தைக் கொண்டு வருவதற்காக வானர சேனையைச் சேர்ந்த அனுமான், கைலாயத்திற்கு அனுப்பப்பட்டார் என்றும், பயணத்தின் போது அனுமார் தாமதித்துச் சென்று விட்டார் என்றும், சிவ பெருமானின் பூஜையை உரிய காலத்தில் செய்ய வேண்டியிருந்ததால், இராமபிரானின் மனைவி சீதை தனது பக்தி உணர்வினுல் இலிங்கம் ஒன்றை உருவாக்கினுள் என்றும், (அந்த இலிங்கம் தான் இராமநாதர் என்று வழங்கப்படுகிறது) அனுமான் ஓர் இலிங்கத்துடன் திரும்பி வந்தபோது, ஏற்கெனவே ஓர் இலிங்கம் இருப்பதை அறிந்து, தனது பணி வீணுகிவிட்டதே என வருந்தி, மனம் தளர்வுற்ருர் என்றும், அப்போது இராமபிரான் அனுமானுக்கு ஆறுதல் கூறியதுடன் அவரால் கொண்டு வரப்பட்ட இலிங்கத்தை இராமநாதருக்கு வடபுறத்தில் இடம் பெறச் செய்தார் என்றும், அனுமானுல் கொண்டு வரப்பட்ட அந்த இலிங்கம் எல்லா வகையிலும் முன் மரியாதை செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார் என்றும் பழங் கதை ஒன்று கூறுகிறது.

இராமேஸ்வரம் தீவின் கிழக்குப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள இராமநாதசாமி கோயில், மிகப் பெரிய பிரகாரத்துக்கும், வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களுக்கும் பெயர் பெற்றது ஆகும். 1220 மீட்டர் (4000 அடி) நீளம் உள்ள இந்தப் பிரகாரம்தான் இந்தியாவிலேயே மிக நீளமான பிரகாரம் ஆகும். இங்குள்ள தூண்கள்—உன்னதமான வேலைப்பாடுகளுக்கும், பிரம்மாண்டமான அமைப்புக்கும், புகழ் பெற்ற பாணிக்கும் பெயர் பெற்றவை. இந்த ஆலயத்தின் கோபுரம் 38.4 மீட்டர் (176 அடி) கொண்டதாகும். இன்று நமக்குக் காட்சி தரும் கோயிலின் அமைப்பு—கி.பி. 12-ஆம் நூற்றுண்டிலிருந்து, பல்வேறு காலங்களில் பல்வேறு மன்னர்களால் உருவாக்கப்பட்டதாகும். கோயில், கடற்கரையில் கட்டப்பட்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகள், கடலில்—அக்னி தீர்த்தம் என்று வழங்கப்படும் பகுதியில் குளிக்கிருர்கள். இந்தப் பகுதியில் உள்ள கடல்—இரைச்சல் இன்றி மிகவும் அமைதியாகக் காட்சி தருகிறது.

இராமேஸ்வரம் தீவுக்குச் செல்வதற்கு, நீண்ட காலமாக ரயில் மார்க்கம்தான் இருந்து வருகிறது. புதிய தரை மார்க்கம் ஒன்றை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. தென் இந்தியாவிலிருந்து இராமேஸ்வரம் தீவை இணைக்கும் வகையில் பாலம் ஒன்றை அமைப்பதற்கு 1973-ஆம் ஆண்டு கால்கோள் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீவு மகாவிஷ்ணுவின் கையில் உள்ள சங்கைப் போன்ற வடிவுடையதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தீவு, தென் இந்தியாவின் மிகப் பெரும் கடல் உணவு மையமாகத் திகழ்கிறது. இங்கு பிடிக்கப்படும் மீன்களும், இருல்களும் வெளிநாடுகளுக்கு மிகுந்த அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த வட்டாரத்தில், மீன் பிடி தொழிலை, நவீன முறையில் வளர்ச்சி செய்வதற்கு, இந்தோ-நார்வே மீன் வளத் திட்டம் ஒன்று, மண்டபத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்தத் தீவைச் சுற்றிலும் உள்ள கடல்களில் அதிக அளவில்



இந்தியாவிலேயே மிக நீண்ட பிரகாரத்தைக் கொண்டுள்ள பெருமை ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோயிலுக்கே உரியது!

மீன்கள் கிடைப்பதுடன், உலகப் புகழ் பெற்ற பவளப் பாறைகளும் கிடைக்கின்றன. பவளப் பாறைகளில் காணப்படும் தோட்டங்களும், அருகில் உள்ள சிறு சிறு தீவுகளின் தோற்றமும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களைக் கவரும் திறன் பெற்றவை. சுருக்கமாகச் சொன்னால், இது தென்னந் தோப்புகளும், புளிய மரங்களும், ஓடைகளுக்கு இடையேயுள்ள மரங்களும் நிறையப் பெற்று, பொன் மணல் மிகுந்த சுவர்க்கத் தீவுபோல் காட்சி தருகிறது.

### காண வேண்டிய இடங்கள்

கோயிலுக்கு வடபுறம் அமைந்துள்ள காந்த மதன பர்வதம் என்னும் சிறு மலை, இந்தத் தீவின் மிக உயர்ந்த இடமாகும். இங்கிருந்து பார்த்தால் தீவு மிக அழகாகக் காட்சி தரும். இங்கே, இரண்டடுக்கு மண்டபம் ஒன்றும், ஒரு சக்கரத்தில் அமைக்கப் பெற்றுள்ள இராமர் பாதமும் உள்ளன. வணக்கத்திற்குரிய இந்தப் பாதங்கள், சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்கின்றன. இந்தத் தீவின் தென் பகுதி முனையான தனுஷ்கோடி 1964-ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலால் முழுதும் சேதமடைந்து விட்டது. ஆனால் இங்குள்ள கோதண்டராமசாமி கோயில் மட்டும் அழியாமல் நிலைத்து நிற்கிறது. இராமேஸ்வரம் செல்லும் பாதையில், கூப்பிடு தூரத்தில் உள்ளது இந்தக் கோயில். இந்த இடத்தில்தான் இராவணனின் தம்பி விபீஷணன், இராமபிரானிடம் சரணடைந்தான் என்று சொல்லப்படுகிறது. இங்கே, இராமர், சீதை, இலட்சுமணன், அனுமான், விபீஷணன் ஆகியோரின் படிவங்கள் உள்ளன.

### போக்குவரத்து வசதி

**விமான மார்க்கம் :** இராமேஸ்வரத்துக்குச் செல்ல, அருகில் உள்ள விமான நிலையம் மதுரை தான். இங்கிருந்து 170 கி.மீட்டர் (100 மைல்) தொலைவில் உள்ளது.

**ரயில் மார்க்கம் :** இராமேஸ்வரத்துக்குச் செல்ல ரயில் மார்க்கம் உண்டு.

**தரை மார்க்கம்:** அருகில் உள்ள இடம் மண்டபம்தான். மண்டபம் வரை பேருந்தில் செல்லலாம். அதன் பின்னர், மண்டபத்திலிருந்து இராமேஸ்வரத்திற்கு ரயில் மூலமாகத்தான் செல்ல வேண்டும். மண்டபத்திலிருந்து 19 கிலோ மீட்டர் (12 மைல்) தொலைவில் இராமேஸ்வரம் உள்ளது.

### தங்கும் வசதிகள்

தமிழ் நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சார்ந்த பயணிகள் விடுதியும், ரயில் நிலைய ஓய்வு விடுதியும், கோயிலைச் சார்ந்த விடுதிகளும், மற்றும் பல தனியார் விடுதிகளும் இங்கு உள்ளன.

தனுஷ்கோடியில் உள்ள கோதண்டராமசாமி கோயில்





# வளம் கொழிக்கும் தஞ்சை

நன்செய்க்குப் பஞ்சமில்லாத் தஞ்சை மாவட்டம் வளங்கொழிக்கும் பூமி! காவிரி ஆற்றினால் பயனுறும் இந்த மாவட்டம் தமிழகத்தின் நெற், களஞ்சியம் என்ற புகழ் பெற்றதாகும்.

வளங் கொழிக்கும் நிலத்தால் மட்டும் அல்லாது வரலாற்றின் புகழ் பூத்த பெருமையும் உடையது தஞ்சை மாவட்டம். அதனால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்கள் இங்கு ஏராளம்! ஏராளம்!

ஆண்ட நாள் ஆண்ட சோழ மாமன்னர்களின் பொற்காலத்தை நினைவூட்டும் இடங்கள் இங்கு பார்ப்பவர்களைப் பரவசப் படுத்தும்.

## தஞ்சாவூரில்...

பிற்காலச் சோழ மன்னர்களில் பெரும் புகழுக்கு உரியவராக விளங்கிய, முதல் இராஜராஜ சோழன் கி.பி. 985 முதல் கி.பி. 1014-ஆம் ஆண்டுவரை தஞ்சைத் திருநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர். இவர் எழுப்பியதே தஞ்சைப் பெரிய கோயில் என்றழைக்கப்படும் பிரகதீசுவரர் ஆலயம்.

216 அடி உயரமுள்ள நடுவிமானத்தோடு 793 அடி நீளமும் 397 அடி அகலமுள்ள இப்பெருங் கோயில் சோழர் காலக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கோயில் கோபுரத்தின் மேல் 89 டன் கனமுள்ள (விமானம்) ஒரே கல்லால் வட்ட வடிவில், கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டிருக்கும் நேர்த்தியும், கல்லெல்லாம் கலை வடிவாய் அமைந்துள்ள காட்சியும் காண்போரைக் கவரும்.


கோயில் சந்நிதியிலுள்ள நந்தி 6 மீட்டர் நீளமும், 2.6 மீட்டர் அகலமும் 3.7 மீட்டர் உயரமும் உள்ளதாகும். பிரம்மாண்டமான தோற்றமுடைய இந் நந்தி பார்ப்பவர்களை மயங்கச் செய்யும்.

தஞ்சைப் பெரிய கோயில் பண்டைய கட்டடக் கலையையும் கலை மலிந்த சோழ நாட்டின் கலைத் திறன் ஆகியவற்றின் உருவகமாக விளங்குகிறது. இக்கோயில் கோபுரத்தின் உட்புறத்தின் தோற்றம் அனைவரையும் வியக்கச் செய்யும். உட்புறம் கூடாக அமைந்துள்ள தோற்றம் பொறி இயல் வல்லுநர்களையும் வியப்பில் ஆழ்த்தும். கோபுர உட்புறச் சுவர்களில் பதினோராம் நூற்றுண்டில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களைக் காண்கின்றோம்.

## சரஸ்வதி மஹால்

சோழ மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னர் மகாராஷ்டிரர், நாயக்க மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்ட பூமியாகவும் தஞ்சாவூர் விளங்கியது.

சரபோஜி மன்னர் காலத்தில் உருவாகியது சரஸ்வதி மஹால் நூலகம். இந்த நூலகம் இந்தியாவின் பழமையான நூலகங்களில் ஒன்றாகும். 30,000க்கு



தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள எழில்மிகு வெண்கலச் சிலை

மேற்பட்ட ஓலைச் சுவடிகளும், மூலப் பிரதிகளும் உள்ளன. இந்திய மொழிகளில் மட்டுமல்லாது ஐரோப்பிய மொழிகளிலும் இங்கு கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.

**கலைக்கூடம்**

தஞ்சை அரண்மனையில் உள்ள கலைக் கூடத்தில் கருங்கற் சிலைப் பகுதி, வெண்கலச் சிலைப் பகுதி என இருபகுதிகள் உள்ளன. கலை அழகு மிக்க கருங்கற் சிலைகள் 110 வைக்கப்பட்டுள்ளன. வெண்கலச் சிலைப் பகுதியில் பல நாட்டினரும் பார்த்துப் பாராட்டிய 165 சிலைகள் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரத்தக்க வகையில் உள்ள இக் கலைக் கூடத்தில் தஞ்சைத் தரணிக்கே உரிய கலை யழகு மிக்க பொருள்களும் உள்ளன. சுருக்கமாகக் கூறினல் தென்னிந்தியக் கலைகளின் காட்சியகமாக இக்கலைக் கூடம் திகழ்கிறது. இங்குள்ள தெய்வச் சிலைகள் அனைத்தும் ஒன்பதாம் நூற்ருண்டிற்கும் பதின்மூன்ரும் நூற்ருண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சோழ அரசு பரவியிருந்த பல்வேறு இடங்களிலிருந்தும் 1951-ஆம் ஆண்டில் திரட்டப்பட்டவையாகும்.

**தஞ்சையின் கலைப்பொருட்கள்**

சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய தஞ்சாவூர்த் தட்டு, வெண்கலச் சாமான்கள், நெட்டியால் செய்யப்படும் பொருட்கள், தொன்று தொட்டுப் புகழுடன் விளங்கும் இசைக் கருவிகள் முதலியன தஞ்சாவூரில் கிடைக்கும்.

**மாவட்டம் முழுவதும்**

தஞ்சாவூர் நகரத்தைப் போன்று தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் பல உள்ளன.

**திருவையாறு**

தஞ்சாவூரிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருவையாற்றில் ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. ஐயாறு என்பதே திருவையாறு என்று வழங்குகிறது. இங்குள்ள பஞ்சநாதேஸ்வரர் திருக்கோயில் புகழ் வாய்ந்தது ஆகும்.

இவ்வூரில்தான் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜரின் சமாதி உள்ளது. ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சங்கீத விழாவான தியாகராஜ ஆராதனை உற்சவம் புகழ் வாய்ந்ததாகும்.

பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்களுக்குப் பெயர் பெற்ற ஊர் கும்பகோணம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் 'மகாமகம்' திருவிழா இங்குதான் நடைபெறுகின்றது. மகா மகக்குளம் இங்கே உள்ளது. ஆண்டுதோறும் மாசி மாதத்தில் 'மாசி மகம்' கொண்டாடப்படுகிறது. ஆதி கும்பேசுவரர் ஆலயம், சாரங்கபாணி திருக்கோயில், நாகேசுவரர் ஆலயம், இராமசாமி திருக்கோயில் முதலியன இவ்வூரிலுள்ள ஆலயங்களில் குறிப்பிடத்தக்கவை பிரம்மாவுக்கு என்று ஒரு கோயிலும் இங்கு உண்டு.

இவை தவிர கும்பகோணம் சுற்று வட்டாரங்களில் மிகப் பெரிய ஆலயங்கள் உள்ளன. திருநாகேச்சுவரத்துக்கு அருகில் உள்ள ஒப்பிலியப்பன் திருக்கோயில், திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயில், சோழர் காலத்துச் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் தாராசுரம் கோயில் முதலியன குறிப்பிடத் தக்கவை.

முருகவேளின் ஆறு படை வீடுகளில் ஒன்றாகக் கருதப்படும் திரு ஏரகம் என்ற சுவாமிமலையும் கும்பகோணத்துக்கு அருகில்தான் உள்ளது.

பட்டு நெசவுத் தொழிலும் கும்பகோணத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சிறப்பான தொழிலாகும்.


### திருவாரூர் தேர்

தெய்வ மணம் கமழும் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயிலும், கமலாலயம் என்ற திருக்குளமும் புகழ் மிக்கவை. அளவிலும் பெரியவை.

தென்னாட்டிலேயே மிகப்பெரிய தேராகும், திருவாரூர்த் தேர்! 'திருவாரூர் தேர் அழகே அழகு' என்ற மொழியால் இதை உணரலாம். இதன் எடை 200 டன்களாகும் — பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடி இத்தேரினை இழுக்க வேண்டும்.

தற்பொழுது இத்தேரில் எஃகுச் சக்கரங்களும் 'ஐடிராலிக்' முறை நிறுத்தும் சாதனமும் பொருத்தப் பட்டுள்ளன. இத் தேர் எளிதாக இழுக்கப் படுவதற்காக, பின்னால் இருந்து புல்டோசரினாலும், டிராக்டர்களினாலும் தள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் சிற்ப வேலைகள் நிறைந்த இத்தேர், காண்பவர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்.



திருவாரூர் கமலாலயத்தின் தெப்பக் குளம்

திருவாரூர், சோழர் காலத்தில் தலைநகராக இருந்த ஊர். மனுநீதிச் சோழன் இங்கு ஆண்டான் என்பதற்கு அடையாளமாக கல் தேர் ஒன்றும் இங்குள்ளது. சங்கீத மும்மூர்த்திகளும் இவ்வூரில்தான் பிறந்துள்ளார்கள்.

திருவாரூரின் சுற்று வட்டாரத்தில் பத்துப் பதினைந்து மைல் தொலைவின் உள்ள ஊர்களான எண்கண், எட்டுக்குடி, சிக்கல் போன்ற ஊர்கள் முருகன் கோயில் கொண்ட ஊர்களாகும்.

### மறைக்காட்டுக் கோயிலும் கோடிக்கரைக் காடும்

வேதாரண்யம் என்று அழைக்கப்படும் திருமறைக் காடு ஆலயம் புகழ் வாய்ந்ததாகும். விடுதலைப் போராட்டத்தின் போது உப்பு சத்யாக்கிரகம் நடைபெற்றது இவ்வூரில்தான். உப்பு இங்கு ஏராளமாக உற்பத்தியாகிறது.

வேதாரண்யத்தை அடுத்துள்ள கோடிக் கரைக் காடு, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகும். பரந்து விரிந்து கிடக்கும் இக் காட்டில் காட்டு மாடு, குதிரைகள் போன்ற விலங்குகள் இருந்தாலும் மான் கூட்டமே மிக அதிகமாக இருக்கும். இது ஒரு மான் வளர்ப்புப் பூங்காவாகத் திகழ்கிறது என்று சொல்லலாம்.

### எம்மதத்தினருக்கும்


இந்து சமயத்தவர்கள் விரும்பும் ஆலயங்கள் ஏராளமாக தஞ்சையில் உண்டு. எனினும் எல்லாச் சமயத்தவர்களுக்கும் உரிய சிறப்பான தலங்களும் தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருக்கின்றன.

### வேளாங்கண்ணி

இந்தியாவின் பல பாகங்களில் இருந்து கிறிஸ்தவ சமயத்தினர் விரும்பி வரும் இடம் வேளாங்கண்ணி. ரோமன் கத்தோலிக்கப் பிரிவினரின் புண்ணியத் தலமாகக் கருதி ஆண்டுதோறும் கூடுகின்றனர். இங்கு நடைபெறும் வேளாங்கண்ணித் திருவிழா புகழ் மிக்கதாகும்.

### நாகூர்

முஸ்லிம் சமுதாயத்தினர் விரும்பி வரும் இடம் நாகூர். இங்குள்ள தர்க்காவில் எல்லாச் சமயத்தினரும் வழிபட வருகின்றனர். நாகூரில் நடைபெறும் கந்தூரி விழா சிறப்பான விழாவாகும். நாகூர், முஸ்லீம்



எல்லா மதத்தினரும் வணங்கும் அன்னை வேளாங்கண்ணி கோயில்

மக்கள் ஏராளமாக வாழும் ஊர் ஆகும்.

**பூம்புகார் :**

குடமலை பிறந்த காவிரி குண திசையில் கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த ஊரே பூம் புகார் எனப்படும் காவிரிப்பூம் பட்டினம். பண்டை நாளில் சோழ மன்னர்களின் தலைநகராக விளங்கிய இடம் பூம்புகார்.

பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு, முத் தொள்ளாயிரம், சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், திருத்தொண்டர் புராணம் முதலிய தமிழ் நூல் களில் காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கின் றன.

தாலமி, பெரிப்ளஸ், ப்ளினி போன்ற அயல் நாட்டவரும் தங்கள் நூல்களில் பூம்புகார் பற்றி எழுதியுள்ளனர். பிரா கிருத நூல்களான மிளிந்தபண, ஜாதகக் கதைகள், அபிதம் மாவ தாரம், புத்தவம் சாத்த சுதா முதலியவற்றிலும் பூம்புகாரைப் பற்றிய விவரங்களைக் காணலாம்.


பார்ஹூத் கல்வெட்டு, சாயா வனம் கல்வெட்டு மூலமாகவும் பூம்புகார் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.


பார்ஹூத் கல்வெட்டு கி.மு. இரண்டாம் நூற்றூண்டைச் சார்ந்தது. கிறிஸ்துவுக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பே காவிரிப்பூம் பட்டினம் சிறப்புடன் விளங்கியது என்பதற்கு இது சான்ருகும்.

இவ்வளவு பெருமையுடைய பூம்புகார், கடல் கோளால் மறைந்தது. இன்று சின்னஞ் சிறிய கிராமமாக விளங்கும் பூம் புகார் அந்நாளில் பெரும் நகர மாக விளங்கியது. தஞ்சை மா வட்டம் சீர்காழி வட்டத்தில் உள்ள கீழையூர், வாணகிரி, மேற்கிலுள்ள மணிகிராமம், மேலப் பெரும்பள்ளம், கீழப் பெரும் பள்ளம் மற்றும் மேலை யூர்ப் பகுதி இந்த இடங்களை உள்ளடக்கி, காவிரிப் பூம் பட்டினம் அமைந்திருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகிருர் கள்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பௌத்தப் பள்ளி ஒன்றின் கட்டட அமைப்பைக் கண்டுபிடித்துள்ளனர். கரிகாற் சோழன் காலத்து நாணயங்கள்,

இந்துக்களும் வணங்கும் நாகூர் தர்க்கா





பூம்புகார் கலைக்கூடம்

ரோமானிய நாணயங்கள் முதலியனவும் இங்குக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இத்தனை பெருமைகள் அமைந்திருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையறியாது இருந்த பூம்புகார் புதிய பொலிவு பெறவும் அதன் இலக்கியப் பெருமை மீண்டும் உயிர்த்தெழவும் ஆன பணிகளில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டது. அதன் அடையாளம் தான் பூம்புகாரில் உருவாக்கியுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம் முதலியன.

சிலப்பதிகாரக் காட்சிகள் அனைத்தும் இங்கே புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன..

கலைக்கூடத்தின் முன் நுழைவாயிலான தோரண வாயிலும் கலைக் கூடத்தின் சிற்ப வேலைப்பாடு மிக்க மரக் கதவும் எழுநிலை மாடமும் பண்டைத்தமிழகத்தின் கலைச் செல்வங்களை நம் கண்முன் காட்டுகின்றன.

இன்று தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவருமிடமாகப் பூம்புகார் திகழத் தொடங்கியுள்ளது.



சரபோஜி மன்னரால் கட்டப் பெற்ற அரண் மனையில் ஒரு பகுதி

தெய்வ மணங் கமழும் திருக் கோயில்கள் பலவற்றை தன் சுற்றுப்புறங்களில் கொண்டது தஞ்சாவூர் மாவட்டம். சீர்காழி, வைத்தீசுவரன் கோயில் போன்ற ஊர்களிலும் புகழுடைய கோயில் களைக் கொண்டது தஞ்சை மாவட்டம்.

வளங்கொழிக்கும் நிலம்

தெய்வ மணங் கமழ்ந்திடும் ஆலயங்கள்

கலை மலிந்த உள்ளங்கள்

கைத்திறன் காட்டும் கலைப் பொருட்கள் நிறைந்த தஞ்சை மாவட்டம் வரலாற்று நினைவுச் சின்னங்களையும் ஏராளமாகக் கொண்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்பை யும் பெற்றுள்ளது.

சாலைப் போக்குவரத்தும் ரயில் வண்டிப்போக்குவரத்தும் தஞ்சை மாவட்டத்தில் நிறைந்து காணப் படுவதால் சுற்றுலாப் பயணி களுக்கு நல் வாய்ப்பாகத் திகழ் கிறது. மேலும் இம்மாவட்டத் தின் சிறிய நகரங்களிலும் தங்கு வதற்கு நிறைய வசதியுள்ளதால் சுற்றுலாப் பயணிகளுக்குத் தொல்லைகள் இருப்பதில்லை.

எனவே, வளங் கொழிக்கும் தஞ்சையைச் சுற்றுலாப் பயணி கள் நாடிச் செல்வதில் வியப்பில்லை.



பூம்புகார் கலைக்கூடத்தில் உள்ள மாதவி சிலை



# மகிழ்வு உலா செல்வோர் காணவேண்டிய மனோரா !

உல்லாசப் பயணிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக உள்ளது மனோரா என்னும் இந்த உப்பரிகை. பட்டுக்கோட்டையில் இருந்து 10 மைல் தெற்கேயுள்ள சரபேந்திர ராஜன் பட்டினத்தில் கடலுக்கு அருகில் கட்டப்பட்டுள்ள மனோரா, தொலைவில் இருந்து பார்ப்பதற்கு ஒரு கலங்கரை விளக்கம் போல் தோன்றுகிறது.

"இங்கிலீஷ் சாதியார் தங்கள் ஆயுதங்களினால் அடைந்த ஜெய சந்தோஷங்களையும், போனபார்ட்டியின் தாழ்த்தப்படுதலையும் நினைவு கூர்வதற்காக இங்கிலீஷ் துரைத்தனத்தின் சினேகிதரும், படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீமை மகாராஜா சத்ரபதி சரபோஜி மகாராஜா அவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டி வைத்தார். சக வருஷம், ஹூ 'க அ க ச' " என்று எழுதப்பட்ட கல்வெட்டு மனோராவில் உள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டும் காணப்படுகிறது. 1814-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மனோராவில் 9 மாடிகள் (அடுக்குகள்) உள்ளன. ஏறத்தாழ 140 அடி உயரமுள்ள மனோராவின் உச்சியை அடைவதற்கு, வளைந்து வளைந்து செல்லக் கூடிய குறுகலான படிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாடியிலிருந்தும் வெளியே நோக்குவதற்கு பல கணிகள் உள்ளன.

கலைத்திறனோடு கட்டப்பட்டுள்ள மனோராவின் உள் சுவரைத் தொட்டுப் பார்த்தால் ,எவ்வளவு வழவழப்பாக அமைந்துள்ளது? எழில் மிகு மனோரா ஒரு சிறு கோட்டையாகவும் அமைந்துள்ளது. மனோராவைச் சுற்றிலும் வட்டவடிவமாகக் கட்டுப்பட்டுள்ள மதிற்சுவர்களுடன் கூடிய "அகழி" உள்ளது. அகழிகளில் அக்காலத்தில் முதலைகள் வளர்க்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அகழியைத் தாண்டுவதற்கு முன்பு தொங்கும் பாலம் அமைக்கப்பட்டிருந்த அறிகுறிகள் காணப்படுகின்றன. தற்பொழுது மரப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அகழியை ஒட்டி இருபுறமும் குகைக் கட்டடங்கள் போன்ற வளைவு மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. குதிரை லாயங்களும் காணப்படுகின்றன. மனோராவின் அருகிலுள்ள தென்னந்தோப்புக்கள் மனோராவிற்கு மேலும் எழில் சேர்க்கின்றன.

கோடைக் காலத்திலும் மனோராவில் குளிர்ச்சியாக இருக்கிறது. மனோராவின் கடைசி மாடம் திறந்தவெளியாக இருப்பதால்அதிலிருந்து கடலைப் பார்க்கும்போது எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. காலையில் எழும் உதய சூரியனையும், மாலையில் விழும் சூரியனையும் மனோராவில் இருந்து பார்ப்பது காணற்கரிய காட்சியாகும்!



# மனங்கவர் மாமல்லபுரம்



தென்னகச் சிற்பக் கலை எழிலுக்கு ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழ்வது மாமல்லபுரமாகும்.

பல்லவ மன்னர்களின் கைவண்ணம் மிளிரும் மாமல்லபுரம் நம் நாட்டவரை மட்டுமன்று, மேலை நாட்டினரையும் வெகுவாகக் கவர்கின்றது. தமிழ் நாட்டுச் சிற்பக் கலைஞர்களின் கைத்திறமையைக் கண்டு வியக்கும் வகையில் அந்தச் சிற்பங்கள் காலத்தால் அழியாதவையாய் கம்பீரமாய்க் காட்சி அளிக்கின்றன.

பல்லவ மன்னன் நரசிம்மவர்மனால் (கி.பி. 600-630) உருவாக்கப் பெற்றசிற்பங்கள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாகும்.

## குகைக்கோயில்கள் (Caves)

பாறையில் குடையப் பெற்ற ஒன்பது குகைக் கோயில்கள் இங்கே உள்ளன. இந்தக் குகை மண்டபங்கள் பல அற்புதக் கதைகளை நமக்குச் சொல்கின்றன. கிருஷ்ண மண்டபம், வராக மண்டபம், மகிஷாசுர மர்த்தினி மண்டபம், திரிவிக்கிரம மண்டபம், இராமாநுஜ மண்டபம் முதலியன இங்கே குறிப்பிடத் தக்கவை.

மகிஷாசுரமர்த்தினி மண்டபத்தில்—ஆயுதம் தாங்கிய தேவியின் சீற்றத்தையும் பாயும் சிங்கத்தையும் நாம் காண்கிறோம். எருதுத் தலையையுடைய அரக்கன் தோற்று வீழ்கிறான்.

மற்றொரு மண்டபத்தில் திருமால், ஆதிசேஷன் என்னும் பாம்பின் மீது பள்ளி கொண்டிருப்பதைச் சித்திரிக்கிறது.

## செதுக்கோவியம் (Bas-relief)


உலகிலேயே மிகப் பெரிய கல்லால் செதுக்கிய ஓவியம் ஒன்று மாமல்லபுரத்திற்குப் பெருமையைத் தருகின்றது. இது 80 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்டது. திமிங்கிலத்தின் வால் போன்ற நீண்ட இந்தச் செதுக்கோவியத்தின் பாறை கடலை நோக்கி இருக்கிறது. இதன் நடுவில் ஒரு பிளவும் இருக்கிறது. இந்தச் செதுக்கோவியத்தைக் குறித்து இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன :

**(1) அர்ஜுனன் தவம்**

எதிரிகளை வெல்வதற்காக பாசுபதாஸ்திரத்தை அடைய அர்ஜு

கல்லும் கதை சொல்லும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன ஐந்து ரதங்கள்!





உலகிலேயே மிகப் பெரிய செதுக்கோவியம!

னன் ஒரு காலில் நின்று கொண்டு சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்ததாகவும், சிவபெருமான் அர்ஜுனன் வேண்டிய வரத்தைக் கொடுத்தார் என்றும், அந்த நிகழ்ச்சியையே இச் சிற்பம் எடுத்துரைக்கிறது என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

**(2) பகீரதன் தவம்**

இராமபிரானின் முன்னோரான பகீரதன், ஆகாயத்திலுள்ள கங்கையைத் தரைக்குக் கொண்டு வருவதற்காக கடவுளரை வேண்டித் தவம் புரிந்ததாகவும், தவத்தின் பயனுய் அக்கோரிக்கை நிறைவேறியதாகவும், ஆனுல் கங்கை மிகுந்த வேகத்துடன் பூமிக்கு வந்தபோது, அதன் வேகத்தைத் தணிக்குமாறு மீண்டும் சிவபெருமானிடம் வேண்டியதாகவும், சிவபெருமான் அவ் வேண்டுகோளை ஏற்றுக் கங்கையை, தம் தலைமீது அமர்த்தி, அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தினுர் என்றும், அந்த நிகழ்ச்சியைத்தான் செதுக்குச் சிற்பம் தெரிவிக்கிறது என்றும் மற்ருெரு சாரார்கருதுகின்றனர்.

**ஐந்து ரதங்கள்: (The Five Rathas)**

மாமல்லபுரத்தின் தென்கோடியில் உள்ளது ஐந்து ரதங்கள் எனப்படும் பஞ்சபாண்டவர் ரதம். அவையாவன :

1. **தர்மராஜர் தேர் :** இது தென்புறத்தில் வலமிருந்து இடமாகக் காட்சி தருகிறது. இந்தக் கோயில் மூன்று மாடங்களைக் கொண்டுள்ளது. மேலே செல்லப் படிகளும் காணப்படுகின்றன. மாடங்களில் சிவபெருமானின் பல வகையான தோற்றங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

2. **பீமன் தேர் :** இது நீண்ட சதுர வடிவமாய்க் காட்சி அளிக்கிறது. இதன் நான்கு தூண்களின் கீழே சிங்கங்கள் காணப்



மாமல்லையில் கடலாடுவது வெளிநாட்டவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது!

படுகின்றன. இதன் நீளம் 45 அடி. அகலம் 25 அடி. உயரம் 26 அடி.

**3. அர்ச்சுனன் தேர் :** ஐராவதத்தில் தோன்றும் இந்திரனையும், கருடனோடு விளங்கும் திருமாலையும், காளையுடன் காட்சி தரும் கங்காதரனையும் இங்கே கண்டு மகிழலாம். இந்தத் தேருக்குப் பின்னே ஒரே கல்லில் வடித்தெடுத்த காளை ஒன்று காட்சி தருகிறது.

**4. திரௌபதி தேர் :** கோயிலின் கருவறையில் துர்க்கை காட்சி தருகிறாள். கோயிலின் வடக்குத் திசையில் கர்ஜனை செய்யும் சிங்கம் ஒன்று காணப்படுகிறது. இந்தக் கோயிலின் அமைப்பு நம்மை வெகுவாகக் கவர்கின்றது.

**5. நகுல், சகாதேவர் ரதம் :** இது தெற்கே காட்சியளிப்பது. இக்கோயிலின் முகப்பில் இரு சிங்கத் தூண்கள் உள்ளன. இக் கோயில் அருகே யானை ஒன்றும் நின்று கொண்டிருக்கிறது.

## கடற்கரைக் கோயில் (The Shore Temple)

மிகப் பழமை வாய்ந்த சிவ-விஷ்ணு கோயில் இது. இக் கோயிலைக் கடலலைகள் முத்தம் இட்ட வண்ணமிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மேற்கு நோக்கியுள்ள கோயிலின் உள்ளே திருமால் பள்ளி கொண்டுள்ள காட்சியும், கிழக்குத் திசையிலுள்ள கருவறையில் லிங்கமும் காணப்படுகின்றன.

மாமல்லபுரத்தில் இன்னும் எத்தனையோ பழமை வாய்ந்த சின்னங்கள் நம்மை மகிழ்விக்கின்றன. பழைய கலங்கரை விளக்கம், திருமூர்த்தி குகை, புலிக் குகை முதலியன நாம் காணத்தக்கனவாகும். கடற்கரையை ஒட்டியுள்ள சாலிவன் குப்பம் கிராமத்தில் புலிக்குகை இருக்கிறது. இந்தக் குகைக்கு அருகே அதிரண சண்டன் மண்டபம் ஒன்று உள்ளது. இந்தப் பெயர், மன்னன் இராசசிம்மனைக் குறிக்கும்.

## போக்குவரத்து வசதிகள்


**அண்மையிலுள்ள விமான நிலையம் :** சென்னை மீனம்பாக்கம். மாமல்லபுரத்துக்கு அருகேயுள்ள இரயில் நிலையம், சென்னை-திருச்சி மார்க்கத்திலுள்ள செங்கற்பட்டு இரயில் நிலையமாகும். சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்கு வர நல்ல சாலை வசதிகள் உள்ளன. திருவான்மியூர்-கோவளம் வழியாகவும் இங்கு வரலாம்.

இங்கு வருவதற்கு மற்ற மார்க்கங்களாவன : (அ) சென்னை-நாவலூர்-கோவளம். (ஆ) சென்னை-நாவலூர்-திருப்போரூர். (இ) சென்னை - செங்கற்பட்டு - திருக்கழுக்குன்றம்.

சென்னையிலிருந்தும் செங்கற்பட்டிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் நாள்தோறும் சென்னையிலிருந்து சுற்றுலாப் பேருந்துகளை விடுகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தினரால் விசிறி வடிவில் கட்டப்பட்டுள்ள கடற்கரை ஓய்வில்லம்





வெளிநாட்டவர்களை வியப்பிலாழ்த்தும் கடற்கரைக் கோயில்!

**இடவசதிகள் :** இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணிகள் விடுதியும், கடற்கரை ஓய்வில்லமும் (நீச்சல் குள வசதியுடன்) உள்ளன. இக்கழகத்தின் சிற்றுண்டி விடுதி ஒன்று கடற்கரைக் கோயில் அருகே உள்ளது.

இதுவன்றி, சில்வர் சாண்ட்ஸ் (Silver Sands), கோல்டன் சன் பீச் ஓய்வில்லமும் (Golden Sun Beach Rest hut), தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை ஓய்வில்லங்களும் உள்ளன.


இங்கு, தனியாரின் இந்திய முறை உணவு விடுதிகளும், தங்கும் விடுதிகளும் உள்ளன.

பூம்புகார் கைவினைப் பொருள் விற்பனை நிலையமும், அரசினர் சிற்பக் கலைக்கூடமும் இங்குக் காணத் தக்கனவாகும்.

### சுற்றுலாப் பயணிகளுக்கு

சுற்றுலாப் பயணிகள் கீழ்க் காணும் இடங்களையும் கண்டு களித்தல் நல்லது :

அழகிய கோவளம் கடற்கரை, கோயில்கள் சூழ்ந்த நகரமும், கைத்தறி மற்றும் பட்டுக்கும் பெயர் பெற்ற காஞ்சிபுரம், நீர்ப் பறவைகள் உய்விடமான வேடந்தாங்கல், பழம் பெருமை வாய்ந்த ஆலயமான திருக்கழுக் குன்றம், வரலாற்றுச் சிறப்பு மிக்க சதுரங்கப் பட்டினம்.



கன்னியாகுமரி கோயில்

# கன்னியாகுமரி

இந்திய நாட்டின் நிலப் பகுதியின் முடிவுப் பகுதி கன்னியாகுமரி; அது மட்டுமல்ல, காந்திஜி, விவேகானந்தர் போன்ற மிகப் பெரும் சிந்தனையாளர்களின் சிந்தனைகளுக்கு முடிவுப் பகுதியாகவும் அமைந்தது இது.

வங்கக் கடல், இந்துமாக் கடல், அரபிக் கடல் ஆகிய முக்கடல்களும் சங்கமம் ஆகும் முக்கூடல் இது. சூரிய உதயம், அஸ்தமனம் கடல் மீது எழும் நிலவுத் தோற்றம் ஆகிய இயற்கைக் காட்சிகள், காண்போர் தம் கண்களுக்கு மிகச் சிறந்த விருந்தாகும்.


குருத்தோலைகளால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்களும் மீன்பிடிப்புப் பணியும் இங்கு, ஆண்டு முழுவதும் வருகை புரிவோரைக் கவர்கின்றன.

**பார்க்க வேண்டிய இடங்கள்**

**கோயில் :** தெய்வீக ஆற்றலால் நாட்டைக் காப்பாற்றி வரும் கன்னித் தெய்வமான கன்னியாகுமரியின் ஆலயம் இது. பார்வதி கன்னியாகுமரியாகப் பிறந்து, சிவபெருமானின் கைத்தலம் பற்றுவதற்குத் தவமிருந்ததாகப் புராணக் கதை கூறுகிறது.

புனித உணர்வுகளுக்கும் ஒற்றுமைக்கும் சின்னமாக இந்த இடம் விளங்குகிறது. ஆலயத்தில் உள்ள கன்னியா குமரியின் மூக்கில் உள்ள வைர மூக்குத்தி மிகவும் புகழ் பெற்றதாகும். கோயிலுக்கு வெளியே வெகு தூரத்திலிருந்து பார்த்தால்கூடத்

அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபம்





கன்னியாகுமரியில் கடலாடுதல்

தெரியும் வகையில் ஒளி வீசித் திகழ்கிறது.

## காந்தி நினைவு மண்டபம்


இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியின் நினைவாக இந்த மண்டபம் எழுப்பப்பட்டு உள்ளது. காந்தியின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னர், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த இடத்தில் இந்த மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், அஸ்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் 2-ல், சூரியன் ஒளி விழுமாறு இந்த மண்டபத்தின் கட்டட அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதே!

## விவேகானந்தர் நினைவு மண்டபம்

கன்னியாகுமரி கோயிலுக்குத் தென் கிழக்கில் கடலில் இரண்டு பாறைகள் காணப்படுகின்றன.

இந்தியாவின் நிலப் பகுதியின் முடிவுத் தோற்றத்தைக் காண விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தப் பாறைகள் பயன்படுகின்றன. இந்த இரு பாறைகளில் ஒன்றில்தான், சுவாமி விவேகானந்தர் நீண்ட காலம் கடுந் தவம் செய்தார். கன்னித் தெய்வத்தின் நல்லருளால்தான், சாதாரண துறவியான அவர், ஆற்றல் பெற்ற பெருந் துறவியானார். அவர் தவம் புரிந்த பாறை, 'விவேகானந்தர் பாறை' என்று வழங்கப்படுகிறது. இந்தப் பாறையில்தான், இந்தியாவின் பல்வேறு வகைக் கட்டடப் பாணிகள் இடம்பெற்ற 'விவேகாநந்தர் நினைவாலயம்' 1970-ல் கட்டப்பட்டது. சுவாமி விவேகாநந்தரின் உருவச் சிலை ஒன்றும் இந்த நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கன்னித் தெய்வத்தின் திருவடித் தடங்கள் இடம் பெற்றுள்ள ஸ்ரீபாத பாறையையும் இங்கே காணலாம். இந்த நினைவாலயத்திற்குச் செல்லப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

விவேகானந்தர் நினைவு மண்டபம்




## சூரியன் மறைவும் சந்திரன் எழுச்சியும்

சூரியன் மறைவுக் காட்சிக்கும் சந்திரன் எழுங் காட்சிக்கும் கன்னியாகுமரி சிறப்புப் பெற்று உள்ளது.

இங்கு சூரியனின் மறைவுக் காட்சியைப் பார்ப்பதும், முழு நிலவு நாளில் கடலை விட்டு எழும் நிலவுத் தோற்றக் காட்சியைப் பார்ப்பதும், ஒவ்வொருவரின் நினைவையும் விட்டு நீங்காத அனுபவமாகும்.

முழு நிலவு நாளில் சூரியன் மறைவதையும், சந்திரன் தோன்றுவதையும்ஒரே நேரத்தில் காண்கின்ற வாய்ப்பைத் தருகின்ற ஊர், இந்தியாவிலேயே இது ஒன்றுதான் இருக்க முடியும். சித்திரை மாதத்தில் (ஏப்ரல்) வருகின்ற முழு நிலவு நாளன்று —சூரியனும் சந்திரனும் ஒன்றையொன்று பார்ப்பது போல, ஒரே நேர்க் கோட்டில்—அடிவானத்தில் காட்சி தருவது மிக அபூர்வமான காட்சி ஆகும். கன்னியாகுமரியின் கடற்கரையில் பல வண்ணங்களில் காணப்படும் மணல்கள் ஒரு சிறப்பம்சமாகும்.



## வட்டக் கோட்டை

டச்சுக்காரர்களால் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டுள்ள கோட்டை ஒன்று இங்கே உள்ளது. கன்னியாகுமரியிலிருந்து 6 கி.மீ. தொலைவில் உள்ள இந்தக் கோட்டை—அவசியம் பார்க்க வேண்டிய இடமாகும். சுற்றுலாப் பயணிகள் வருகை புரியத் தகுந்த இடம்.

## சுசீந்திரம்

இங்குள்ள தாணுமாலயன் கோயில் பல்வேறு சகாப்தங்களுக்குச் சொந்தமான கலைப் பொருள்களின் கருவூலமாக விளங்குகிறது. கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இந்தக் கோயிலில் காணப்படுகின்றன. கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் மார்க்கத்தில் 13 கி.மீ. தொலைவில் உள்ளது இவ்வூர்.



சுசீந்திரம் கோயில்

## பத்மனபபுரம்

கி.பி. 133 வரை திருவாங்கூரின் தலைநகரமாக விளங்கிய இவ்வூர், கன்னியாகுமரி—திருவனந்தபுரம் சாலையில், கன்னியாகுமரியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள அரண்மனையில் பழங்காலக் கலைச் சின்னங்கள் பல இடம் பெற்றுள்ளன. ஏறக்குறைய 6 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோட்டை ஒன்று இம் மாளிகையில் உள்ளது. இக்கோட்டையை ஒட்டியுள்ள இராமசாமி கோயிலில், 45சிற்பங்களில் இராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன.

## போக்குவரத்து வசதி


**விமான மார்க்கம்** : கன்னியாகுமரிக்குச் செல்வதற்கு அருகில் உள்ள விமான நிலையம் திருவனந்தபுரம். இது 86 கி.மீட்டர் (54 மைல்) தொலைவில் உள்ளது.

**தரை மார்க்கம்** : கன்னியாகுமரி, தென்னிந்தியாவில் உள்ள எல்லா முக்கிய நகரங்களுடன் சாலை மூலம் இணைக்கப் பெற்று உள்ளது. மாநில அரசின் பேருந்துகள் கன்னியாகுமரிக்குச் செல்கின்றன.

**ரயில் மார்க்கம்** : கன்னியாகுமரிக்கு ரயில் பாதை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்பொழுது திருநெல்வேலி ரயில்நிலையத்தில்தான் இறங்க வேண்டும். அங்கிருந்து பேருந்தின் மூலமாக நாகர்கோயில் மார்க்கத்தில் கன்னியாகுமரிக்குச் செல்ல வேண்டும்.

## தங்கும் வசதிகள்

தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 'கேப் ஹோட்டல்' என்னும் விடுதியும், பயணிகள் விடுதியும் உள்ளன. தனியாரால் நடத்தப்படும் விடுதிகளும் உள்ளன. தேவஸ்தானத்தாரால் நடத்தப்படும் ஓய்வு இல்லமும் உள்ளது.



# எழில் கொஞ்சும் ஏர்க்காடு

இயற்கை அன்னை களி நடம் புரியும் இடம்தான் ஏர்க்காடு. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்ற மரஞ்செடி கொடி வகைகள், கண்ணைக் கவரும் வண்ண மலர்க் கூட்டங்கள். விண்ணில் அலைஅலையாய் படர்ந்து செல்லும் மேகங்கள், கோடை போக்கும் குளிர் தென்றல் இத்தனையும் அனுபவிக்க—கண்டுகளிக்க நம்மை 'வா வா'வென அழைப்பது எழில் மிகு ஏர்க்காடு!

சேலம் நகரிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அழகிய மலைப் பகுதியே ஏர்க்காடு. சேர்வராயன் மலைத் தொடரில் உள்ள எழில் மிகு மலை வாழிடமாய் விளங்கிவரும் ஏர்க்காடு, கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 5,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

இங்கே ஒரு பெரிய ஏரி இயற்கையாய் அமைந்துள்ளது. அன்று ஏரிக்காடாய் இருந்த பகுதியே இன்று ஏர்க்காடு என்று அழைக்கப்படுகிறது.

ஏர்க்காட்டின் அமைப்பு, அதன் தட்ப வெப்ப நிலை ஆகியவை இயற்கையாகவே மக்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. வெப்பம் குறைந்தது 13 டிகிரி சென்டிகிரேடு, அதிகப்படி 29 டிகிரி சென்டிகிரேடுமாக இருப்பதால், இங்கு ஆண்டு முழுவதும் எந்தச் சமயத்திலும் போய் வரலாம். இம்மலையின் மொத்தப் பரப்பளவு 147.5 சதுர மைல்கள். சுமார் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஏர்க்காட்டில், ஏறத்தாழ பதினேழாயிரம் மக்கள் மலைவாழ் மக்களாவர். இவர்கள் சில நூற்றுண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து வந்து குடியேறியதாக ஆங்கில வரலாற்று ஆசிரியர் திரு. இ. டபிள்யூ. வில்கின்ஸ் அவர்கள் கூறுகிறுர்.

ஏர்க்காடு 67 கிராமங்களைக் கொண்டது. இங்கே ஓர் ஊர் ஆட்சி ஒன்றியமும் உள்ளது.

இம்மலைத் தொடர் முதன் முதலில் கண்டறியப்படுவதற்கு முன்னர் இருண்ட காடுகளாய் இருந்தது. அப்பொழுது சேலம் மாவட்டஆட்சித் தலைவராயிருந்த திரு. எம். டி. காக்பர்ன் என்ற ஆங்கிலேயர், முதன் முதலாக (1820-29) இம்மலைத் தொடரில் 'தி கிரேஞ்ச்'("THE GRANGE") என்ற மாளிகையைக்கட்டி, அங்கு அரேபியாவிலிருந்து கொண்டு வந்த காபி, ஆப்பிள், பேரி முதலான பயிர் வகைகளைப் பயிரிட்டார். இங்கு உள்ள காபித் தோட்டத்தில் சுமார் 10,000 தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஏர்க்காடு மற்றும் சேர்வராயன் மலைப் பகுதிகளில் ஆரஞ்சு, எலுமிச்சை, வாழை, பேரி, பலா, கொய்யா, மா போன்ற கனி வகைகளும் பல்வகை மலர் வகைகளும் ராகி, வரகு, சாமை, கோதுமை போன்ற பயிர் வகைகளும் பயிரிடப் பெற்று வளங்கொழிக்கும் மலையாகத் திகழ்கிறது.

செல்வம் கொழிக்கும் ஏர்க்காட்டு மலையிலே எத்தனை எத்தனை காட்சிகள் நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன!

## எழில்மிகு ஏரி

தென்னகத்தின் அணிகலனுய் விளங்கும் ஏர்க்காட்டின் மையப் பகுதியில் அழகாய்க் காட்சியளிக்கிறது ஓர் ஏரி. இதனைச் சுற்றிலும் அமைந்துள்ள இயற்கைக் காட்சிகள் நம்மை வெகுவாகக் கவர்கின்றன். இந்த ஏரியில் படகில் செல்வது மனத்துக்குத் தெம்பூட்டுவதாகும்.

## அண்ணு பூங்கா

ஏரியின் அருகே காட்சியளிப்பது அண்ணு பூங்கா. இங்கே பெரியவர்கள் மட்டுமல்ல, சிறுவர்களும் ஆடி மகிழ்வதற்கேற்ற, 'சிறுவர் பூங்கா' ஒன்று உருவாக்கப் பெற்றுள்ளது. இப்பூங்காவில் மலர்க் கண்காட்சியும் நடத்தப் பெறுகின்றது.

## பாவையின் பீடம் (Lady's Seat).

ஏர்க்காட்டில் இது ஒரு முக்கியமான இடம். இந்த இடத்திலிருந்து கீழே பார்த்தால் சேலம் சந்திப்பு, கஞ்சமலை, மேட்டுர் அணை முதலானவற்றைக் காணலாம். இரவு நேரத்தில் இங்கே நின்று கொண்டு சேலம் நகரைக் கண்டால், 'மேலே தான் வானம்—தாரகைகள், கீழேயுமா?' என்று எண்ணத் தோன்றும். ஆம். மின் விளக்குகள் இலட்சக் கணக்கான தாரகைகள் போல ஒளிவிடுவதைக் கண்டு மகிழ்லாம்.

பகோடா முனை (Pagoda Point)

இதன் உச்சியில் நின்று கொண்டு நம்மைச் சுற்றி வட்டமிட்டால் தொலை தூரக் காட்சிகள் எல்லாம் கண்களுக்கு இனிமையாய்த் தோன்றும். மேகக் கூட்டங்கள் நம்மைத் தழுவிச் செல்வது போன்ற உணர்வு ஏற்படும்.

கரடிக் குகை (Bears's Cave)

இப்போது கரடி இல்லாத குகைதான் கரடிக் குகை. முன் ஒரு கரடி இந்தக் குகையில் இருந்ததாம். இதனுள்ளே 15 அல்லது 20 அடி வரைதான் செல்ல முடிகிறது. அதற்கு மேல் ஒரே இருள். இதற்கு அருகில் ஒரு பங்களா இருக்கிறது. அதற்கு 'கரடிக் குகை பங்களா' அல்லது நார்ட்டன் பங்களா என்ற பெயர் உண்டு. இந்தப் பங்களாவின் வயது எத்தனை தெரியுமா? நூறு! இப்போது இதில் ஒரு தமிழர் வசித்து வருகிறார்.

சேர்வராயன் கோயில்

சேர்வராயன் மலைத் தொடரின் உச்சிப் பகுதிதான், சேர்வராயன் கோயில். ஆண்டுதோறும் மே திங்களில் இங்கு கொண்டாடப்பெறும் திருவிழாவில் நூற்றுக் கணக்கான மலைவாசி மக்கள் கூடுவர். இக்கோயிலுக்குச் செல்லும் வழியில் அலுமினியச் சுரங்கம் ஒன்றும் இருக்கிறது. கரடிக் குகைக்குள் சென்றால் இக்கோயிலை அடையலாம் என்றும் கூறுகிறார்கள்.

நெஞ்சில் நிற்கும் நல்ல இடங்கள்

அவசரமும் ஆரவாரமுமிக்க நகர வாழ்க்கையில் உழன்ற நமக்கு, அமைதியே உருவான ஏர்க்காடு நம்மை மலைக்க வைக்கிறது, மகிழ வைக்கிறது.

'லூப் ரோடு, கிளியூர் நீர் வீழ்ச்சி, மூலிகைப் பண்ணை முதலானவை நாம் பார்க்க வேண்டிய இடங்களாகும்.

மனத்துக்கு இன்பமூட்டும் மலைப் பகுதிக்கு—எழில் கொஞ்சும் ஏர்க்காட்டிற்குப் போகாத நாள் வீண் நாளே!



# ஒகேனக்கல்

"புகைப் பாறை என்று எதற்குப் பெயர்?"

இந்த வினாவுக்கு விடை தெரிய வேண்டுமானால் ஒகேனக்கல்லுக்குச் சென்று பார்த்தால் தெரியும். ஆம், 'ஒகேனக்கல்' என்பதற்குப் 'புகைப்பாறை' என்று பொருள்! உயரமான மலையில் இருந்து பள்ளமான இடத்தில் தண்ணீர் வேகமாக வடியும்பொழுது, தண்ணீர் பனித் துளியெனச் சிதறி, புகைமண்டலம் போல் சூழ்ந்துள்ளதாலேயே இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

தருமபுரியிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலும், பெங்களூரிலிருந்து 130 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது ஒகேனக்கல்.

விடுமுறை நாட்களை இனிமையாகக் கழித்திட ஏற்ற இடம் ஒகேனக்கல். காவிரிக் கரையில் 'கல கல' வென இனிய ஒலியுடன் நம்மை மெய்மறக்கச் செய்கிறது ஒகேனக்கல்லின் ஒய்யாரமான அருவி.

இந்தப் புனித அருவியில் நீராடினால் நோயெல்லாம் நீங்கும் என்பார்கள்; இந்தச் சக்தி இந்த அருவிக்கு உண்டு.

மலைகள் சூழ்ந்த இந்த அருவியின் அழகிய காட்சியையும், பனி மேகங்கள் படர்ந்த எழிலையும் நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். இங்கே தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின், அழகிய சுற்றுலாப் பயணிகள் விடுதி ஒன்று உள்ளது.

சுற்றுலாப் பயணிகள் சுகம் பெற்றிட, அவர்கள் அகமும் முகமும் மலர்ந்திட ஓர் எழிலார்ந்த இயற்கைச் சூழ்நிலைத் தலம்தான் ஒகேனக்கல் என்றால் அது மிகையல்ல!

# மதுரை மாநகர்



இந்தியாவின் புராதன நகரங்களில் இதுவும் ஒன்று. மதுரையின் புகழ் பெற்ற ஆலயத்தில் உள்ள மீனாட்சி, பாண்டிய அரசனின் மகளாகப் பிறந்தவளென்றும், சிவ பெருமான் சுந்தரேஸ்வரர் என்ற பெயரில் வந்து அவளைத் திருமணம் செய்து கொண்டார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. சிலப்பதிகார நூலின் நாயகியான கண்ணகி — தன் கணவன் கோவலனுக்காக நீதி வேண்டி நின்றதும் இந்த மதுரை நகரத்தில்தான். குலசேகரன் என்னும் பாண்டிய மன்னன் இந்தக் கோயிலுக்கு அடித்தளம் போட்டான் என்றும் இந்த நகரத்தை அமைத்தான் என்றும், இந்நகரத்துக்குப் பெயரிட விரும்பியபோது, சிவபெருமான் நேரில் தோன்றினார் என்றும் அவரது சடாமுடியிலிருந்து சிலதேன் துளிகள் (மதுரம்) அந்த நகரத்தில் விழுந்தன. என்றும் மதுரம் விழுந்தமையால் இந்நகரம் மதுரை எனப் பெயர் பெற்றதும் என்றும் ஒரு கதை வழக்கில் உள்ளது.

மூன்று தமிழ்ச் சங்கங்கள், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்நகரத்தில் சிறப்புற்று விளங்கின. தமிழ் மொழி, கலை, சிற்பக் கலை ஆகியவற்றை மிகவும் ஆதரித்து வந்த பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப் பின்னர் நாயக்க மன்னர்கள் இந்நகரத்தை ஆட்சி செய்துள்ளனர். பாண்டிய மன்னர்கள் செய்த திருப்பணிகளைக் காத்து வந்ததுடன், அப்பணியை விரிவடையச் செய்த பெருமை நாயக்க மன்னர்களுக்கு உண்டு.

மதுரை—ஒரு தாமரை மலரின் வடிவம் போல் அமைந்துள்ளது ; ஊரின் நடுவே மீனாட்சி-சுந்தரேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. வைகை நதியின் கரையில் அமைந்துள்ள இந்த நகரத்தைச் சுற்றிலும் பசுமை மிகுந்த வயல்களும், தென்னந் தோப்புகளும், பெரும் மரங்களும் காட்சி தந்து இது ஓர் அழகு நகரமாகத் திகழ்கிறது.

விண்வெளியிலிருந்து பார்க்கும்போது, யானை மலை, நாக மலை என்னும் இரண்டு மலைகளால் சூழப்பட்டுள்ள மதுரை நகரம், ஒரு கேடயம் போல் காட்சி தருகிறது. விமானம் மூலம், அல்லது பஸ்ஸின் மூலம் அல்லது ரயிலின் மூலம் சென்று இந்நகரத்தை அடைவோரை, ஒன்பது மாடங்கள் கொண்ட மீனாட்சி ஆலயம் வானவெளிக்கு எதிராக, கம்பீரமாக நின்று அமைதியுடன் வரவேற்பது போல—வாழ்த்துக் கூறுவது போலத் தோற்றமளிக்கிறது.


## சுற்றுலாப் பயணிகள் மதுரையில் பார்வையிட வேண்டிய இடங்கள்

### ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்

செவ்வக வடிவமுள்ள இந்த ஆலயம் 847 அடி நீளமும் 792 அடி அகலமும் கொண்டது. ஆலயத்தைச் சுற்றிலும் 5 கோபுரங்கள் உள்ளன. ஆலயத்தின் தென் புறத்தில் உள்ள கோபுரம் அனைத்திலும் உயரமானது ; இது தரை மட்டத்திலிருந்து 160 அடி உயரம் உள்ளது. இந்த ஆலயம், உண்மையில் இரட்டை ஆலயம் ஆகும். தென் பகுதி ஆலயம் சுந்தரேஸ்வரரின் மனைவியான மீனாட்சிக்கும், மற்றொரு ஆலயம், சிவபெருமானுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தில் உள்ள ஆயிரம் கால்மண்டபத்தில் ஆலயத்தைச் சார்ந்த கலைப் பொருள் கண்காட்சி ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது

### திருமலை நாயக்கர் மஹால்

இது, மீனாட்சி ஆலயத்திற்குத் தென் மேற்குப் பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கட்டடம் முழுதும் இந்தோ-முகம்மதிய சிற்பப் பாணியில், நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டுள்ளது.



மதுரை மீனாட்சி—சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்

காண்பவரை வியப்படையச் செய்யும் திருமலை நாய்க்கர் மஹால்



### மாரியம்மன் தெப்பக் குளம்


வண்டியூர் தெப்பக் குளம் என்றும் வழங்கப்படும் இது, நகரத்தின் கிழக்குக் கோடியில் உள்ளது. மீனாட்சி கோயிலைப் போலவே இது பரப்பளவு கொண்டது. இந்தக் குளத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறது.

### கூடல் அழகர் கோயில்

மதுரை நகரின் வடமேற்குப் பகுதியில் உள்ள வைஷ்ணவக் கோயில் இது. அழகான சிற்ப வேலைப்பாடுகள் இந்த ஆலயத்தில் உள்ளன. இந்தக் கோயிலின் மூர்த்தி, அமர்ந்த நிலை—நின்ற நிலை—சயனித்த நிலை என்று மூன்று நிலைத் தோற்றத்தில் உள்ளார். இந்த ஆலயத்தைச் சுற்றிலும், திருமலை நாயக்கரின் மாளிகையின் அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றன. முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான பழமுதிர் சோலையும் இங்கே உள்ளது. அழகர் கோயிலிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இது.

### திருப்பரங்குன்றம்

மதுரை ரயில் நிலையத்திலிருந்து தெற்கில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இவ்வூர். இங்குள்ள ஆலயம், சுப்ரமணிய



சுற்றுலாப் பயணிகளின் மனத்தைக் கவரும் வைகை அணை

ருக்காக அமைக்கப்பட்டுள்ளது. முருகனின் அறுபடை வீடுகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள சுப்ரமணியர் ஆலயத்தின் கருவறை, மலையைக் குடைந்து செய்யப்பட்டதாகும்.

**கொடைக்கானல்**

இது, மிகவும் புகழ் பெற்ற மலை வாழ் இருப்பிடம் ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலையில், ஏறக்குறைய 2,350 மீட்டர் (7,000 அடி) உயரத்தில் இது அமைந்திருக்கிறது. மதுரை ரயில் நிலையத்திலிருந்து 121 கிலோ மீட்டரிலும், கொடை ரோடு ரயில் நிலையத்திலிருந்து 80 கிலோ மீட்டரிலும் இது இருக்கிறது.

**பெரியாறு வனவிலங்குச் சரணாலயம் (தேக்கடி)**

கேரள மாநிலத்தில் அமைந்து இருந்தாலும், தமிழ்நாட்டின் எல்லையோரத்தில் உள்ளது இந்தச் சரணாலயம். மதுரையிலிருந்து 146 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்தச் சரணாலயத்தில் உள்ள யானைகள், காட்டெருமைகள், காட்டு மான்கள், காட்டுப் பன்றிகள் ஆகியவை காண்போர் கண்களுக்கு விருந்தளிக்கின்றன.

**வைகை அணை**

மனத்தைக் கவரும் இந்த அணை, மதுரையிலிருந்து பெரியாறு வன விலங்குச் சரணாலயத்திற்குச் செல்லும் வழியில், 69 கி. மீட்டர் தொலைவில் உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும் தன்மையுள்ளது.

**பழனி**

தென்னிந்தியாவின் புகழ் பெற்ற யாத்திரை ஸ்தலம். இங்குள்ள மலையில் முருகனின் ஆலயம் உள்ளது. முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று இது. அடிவாரத்திலிருந்து மின் இழுவை ரயிலின் மூலம் கோயிலுக்குச் செல்லலாம்.

**சுருளி அருவி**

மதுரை நகரிலிருந்து 128 கி. மீட்டர் தொலைவில் தேக்கடி செல்லும் வழியில் உள்ளது.

**போக்குவரத்து வசதி :**

**விமான மார்க்கம் :** மதுரையில் விமான நிலையம் உள்ளது. சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய பெரு நகரங்களை இணைக்கும் விமான மார்க்கத்துடன் மதுரை இணைக்கப்பட்டு உள்ளது. சென்னையிலிருந்து 80 நிமிடப் பயணத்தில் மதுரையை அடைய முடியும்.

**ரயில் மார்க்கம் :** சென்னை, திருவனந்தபுரம், திருச்சிராப்பள்ளி, இராமேஸ்வரம் மற்றும் பல முக்கிய நகரங்களுடன் ரயில் மார்க்கத்தில் மதுரை இணைக்கப்பட்டுள்ளது.

**தரை மார்க்கம் :** தரை மார்க்கத்தில் உள்ள எல்லா முக்கிய நகரங்களுடனும் மதுரை இணைக்கப்பெற்றுள்ளது.

**தங்கும் வசதிகள்**

இந்திய சுற்றுலாக் கழகத்தின் நிர்வாகத்திலுள்ள பயணிகள் விடுதி மற்றும் அழகர் கோயில் ரோடில் உள்ள பாண்டியன் ஓட்டல், முதலியன, மேல்நாட்டு முறையில் அமைந்து உள்ளன.

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த பயணிகள் விடுதியும், மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான பல விடுதிகளும், இந்திய முறையில் அமைந்துள்ளன.

ராணி மங்கம்மாள் சத்திரம், மாநகராட்சிப் பயணிகள் விடுதி, மீனாட்சி நிலையம், பொதுப் பணித் துறையின் பயணிகள் விடுதி மற்றும் ரயில் நிலைய ஓய்வு விடுதி முதலியவை அதிகச்செலவில்லாத தங்கும் இடங்களாகும்.



மதுரை மீனாட்சி – சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள திருவுருவச்சிலை

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. $20\frac{1}{2}$ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. $20\frac{1}{2}$ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்.**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# கொடைக்கானல் தென்னாட்டின் இளவரசி!



மதுரை மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் கவர்ச்சி மிகு கோடைக் கால வாழ்விடமாகும். உதகமண்டலத்தை போல இங்கே கண் கவர் காட்சிகள் உண்டு. மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடர்பான பழனி மலையின் உச்சியில் உள்ள இது, நவீன நாகரிகத்தினால் தாக்கப்படாது இருக்கிறது. 'கோடை' எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இது, மதுரையிலிருந்து 120 கி.மீட்டர் (75 மைல்) தொலைவில் உள்ளது.

இயற்கை, கொடைக்கானலில் செழித்துக் கொழித்து நிற்கிறது. மரங்களடர்ந்த சரிவுகள், வலிமை மிகு பாறைகள், கண்கவர் அருவி, அழகு மிகும் ஏரி இவை யாவும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் மயக்குவது உறுதி. தினந்தோறும் மிதமான பருவ நிலையும், பன்னிரண்டு மணி நேரச் சூரிய ஒளியும் படைத்துத் திகழும் கொடைக்கானல், இந்தியாவில் உடல் நலம் காக்கும் புகழ் பெற்ற ஒரு சில இடங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பச்சை வண்ண மரங்கள் நிறைந்த சரிவுகளின் நடுவில் பிரம்மாண்டமாகவும் நட்சத்திர வடிவிலும் அமைந்திருக்கும் ஏரி, மரகதக் கல்லினால் செய்த அணிகலன் போல் ஒளிவீசித் திகழ்கிறது. 'கோடை'யில் ஒரு படகுச் சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தில் உல்லாசப் படகுகளும், பரிசில்களும், பந்தயப் படகுகளும் உள்ளன.

பிரயண்ட் பூங்கா, தூண் பாறைகள் (மரணப் பாறைகள்), பெருமாள் சிகரம், வெள்ளி அருவி, கரடி அருவி முதலியனவும் வானியல் தொலை நோக்கி நிலையமும் மற்றும் 'கல்ஃப்' விளையாட்டும் கொடைக்கானலின் புகழ் பெற்ற அம்சங்களாகும்.

கொடைக்கானலின் அருகில் இருக்கும் செண்பகனூரில் உள்ள புனித இதயக் கல்லூரியில் இடம் பெற்றுள்ள அரும்பொருட் காட்சியகத்தை ஒவ்வொரு பயணியும் கட்டாயம் பார்க்க வேண்டும். ஏறக்குறைய மூந்நூறு வகைச் செடிகளின் மாதிரிகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.


இந்தியாவிலேயே மிக நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வரும் அஞ்சல் நிலையம் கொடைக்கானலில்தான் உள்ளது.

'கோடை'—மலர்கள்—உயர் விளைச்சல் உள்ள மலைவாழைப் பழம், மற்றும் ப்ளம் ஆகிய பழ வகைக்குப் பெயர் போனது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலர், கொடைக்கானலுக்கே தனிப்பெருமையை அளிப்பது. 1969-ல் அது மலர்ந்தது. இனி அடுத்த மலர்ச்சி 1981-ல் தான் நடைபெறும்.

### போக்குவரத்து வசதி

கொடைக்கானல் எல்லா முக்கிய நகரங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் மலைக்கு, பேருந்தின் வாயிலாகத் தான் செல்ல முடியும். மதுரை,



'பில்லர் ராக்' எனப்படும் தூண் பாறைகள்

திருச்சி, கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், வைகை அணை, பழனி ஆகிய ஊர்களிலிருந்து கொடைக்கானல் மலைக்குப் பேருந்தில் செல்லலாம்.

கொடைக் கானல் மதுரையிலிருந்து 120 கி. மீட்டர் (75 மைல்), கொடை ரோட்டிலிருந்து 80 கி. மீட்டர் (50 மைல்), திருச்சியிலிருந்து 192கி. மீட்டர் (120 மைல்), சென்னையிலிருந்து 520 கி. மீட்டர் (325 மைல்) தொலைவு உள்ளது.

ரயில் மார்க்கமாகச் செல்ல விரும்பும் பயணிகள் கொடைக்கானல் ரோடு ரயில் நிலையத்தில் இறங்கி, பேருந்தின் மூலம் செல்ல வேண்டும். இந்த ரயில் நிலையத்திலிருந்து 80 கி.மீட்டர் (50 மைல்) தொலைவில் கொடைக்கானல் உள்ளது. சென்னை, திருவனந்தபுரம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய ஊர்களுடன் இந்த ரயில்போக்குவரத்துப் பாதை இணைக்கப்பட்டுள்ளது.

விமான மார்க்கமாக வர விரும்புவோர், மதுரை விமான நிலையத்தில் இறங்க வேண்டும். பின்னர் வாடகைக் கார் அல்லது பேருந்தின் மூலம், மதுரையிலிருந்து கொடைக்கானல் போகலாம். இந்த விமான மார்க்கம் சென்னை, திருவனந்தபுரம், கொச்சி, திருச்சி, கொழும்பு ஆகிய ஊர்களுடன் இணைக்கப்பெற்றுள்ளது.

**கோயில்கள்**

இங்குள்ள குறிஞ்சி ஆண்டவர் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில், ஆனந்தகிரியில் உள்ள முருகன் கோயில் ஆகியவை இந்து மதத்தவரின் வணக்கத்துக்குரிய ஆலயங்கள் ஆகும்.

முஞ்சிக்கல்லில் உள்ள புனித இதய சர்ச், கோரபூரில் உள்ள பிரான்சிஸ் சேவியர் சர்ச், லா சலேட்டில் உள்ள புனித மேரி சர்ச், கார்மேல்புரத்தில் உள்ள புனித ஜோசப் சர்ச், தென்னிந்திய சர்ச், புனித பீட்டர் சர்ச், லூத்தரன் மிஷன் சர்ச் ஆகிய கிறிஸ்தவ சமயத்தினரின் ஆலயங்களும் இங்கு உள்ளன.

'எல்லிஸ் வில்லா' என்ற பகுதியில் முகம்மதியரின் ஆலயமான மசூதி உள்ளது.

**தங்கும் வசதிகள்**

மேனாட்டு முறையில் அமைந்த 'கார்ல்டன்' ஹோட்டல் விடுதி உள்ளது.

தமிழ் நாடு அரசின் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த பயணிகள் விடுதியும் மற்றும் தனியார்களின் விடுதிகளும் இங்கு உள்ளன. இவை இந்திய முறையில் அமைந்துள்ளவை.



# கோவளம் கூறும் கதை!

சென்னைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக் கூடிய இடங்களில் ஒன்றாகக் கோவளம் கடற்கரை விளங்குகிறது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் சாலையில் 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவளம் ஒரு சின்னஞ் சிறு, எழில் மிகு கடற்கரைக் கிராமமாகும். தென்னந்தோப்புகளும், உப்பளங்களும் நிறைந்துள்ள இவ்வூர், மீனவர்கள் வசிக்கும் ஒரு சிறிய கிராமம் என்றாலும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும் அழகிய கடற்கரையையும், மகிழ்வு உலா (Picnic) செல்வதற்கான இடத்தையும் கொண்டு உள்ளது. ஆனால் கோவளம் கடற்கரையில் பல வரலாற்று உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. இவ்வழகிய இடத்தின் மங்கிய கடந்த கால உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வர ஈண்டு முயற்சிக்கப்பட்டுள்ளது.

முற்காலத்தில் தொண்டை நாட்டிலும், பிறகு பல்லவப் பேரரசிலும் அமைந்திருந்த இந்தக் கடற்கரைக் கிராமம், 17-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், கிழக்குக் கடற்கரையில் டச்சுக்காரர்கள் வியாபாரம் செய்வதற்கான காலனிகளை அமைத்த போது முக்கியத்துவம் பெற்றது. ஆஸ்டெண்ட் (OSTEND) கம்பெனி என்று பரவலாக வழங்கப்பட்ட டச்சுப் பேரரசின் கிழக்கு இந்தியக்கம்பெனி—டச்சுக்காரர்களுக்கு முன்பு, இந்தியாவிற்கு வியாபாரம் செய்வதற்காக வந்த போர்ச்சுகல் நாட்டினரைப் பின்பற்றி—தென் இந்தியக் கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினம் பழவேற்காடு, கோவளம், சதுரங்கப்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தங்கள் காலனிகளை அமைத்தது. இவைகளில் மசூலிப்பட்டனமும் நாகப்பட்டினமும் சிறு துறைமுக நகரங்களாகும். பழவேற்காடு என்பது சென்னைக்கு வடக்கேயுள்ள மீன் பிடிக்கும் இடமாகும். கோவளமும், சதுரங்கப்பட்டினமும் சென்னைக்குத் தெற்கே அமைந்து உள்ளன. கோவளம், உப்பு உற்பத்தி செய்யும் ஒரு மையமாக விளங்கியது. கோவளத்தின் தெற்கே அமைந்துள்ள சதுரங்கப் பட்டனம் ஒரு காலத்தில் நேர்த்தி மிகு மஸ்லின் துணி உற்பத்திக்குப் பெயர் பெற்றதாக விளங்கியது. கோவளம் கடற்கரை அருகில் டச்சுக்காரர்கள் ஒரு வியாபார நிலையத்தையும், ஒரு சிறிய கோட்டையையும், ஒரு கிறிஸ்துவ ஆலயத்தையும் கட்டினர். டச்சுக்காரர்களின் தாய் நாடு ஹாலந்து (Holland) என்று அழைக்கப்பட்டதால், உள்ளூர் மக்கள் டச்சுக்காரர்களை 'உலந்தக்காரர்கள்' என்று அழைப்பது வழக்கமாகியது. இந்த வியாபாரிகள் உள்ளூர் மக்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்கினார்கள். அவர்கள், தங்களுடைய வியாபாரத்தில் நாணயமாக நடந்து கொண்டதாகத் தெரிகிறது.

டச்சுக்காரர்களால் கோவளத்தில் நடைபெற்ற வியாபாரம் சில காலம் செழித்தோங்கி இருந்தது. ஆனால் அப்போது இந்தியாவில் வாணிபம் செய்து கொண்டிருந்த போர்ச்சுகல், பிரான்சு, பிரிட்டன் போன்ற இதர ஐரோப்பிய வியாபார நாடுகளால், டச்சுக்காரர்கள் வியாபாரத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டனர்.

டச்சுக்காரர்களின் ஆர்வம் முழுவதும் தூரக் கிழக்கில் உள்ள வாசனைத் திரவியத் தீவுகளில் ( Spice Islands ) வியாபாரம் செய்வதிலேயே இருந்தது. ஆகவே, 18-ஆம் நூற்றாண்டின் நடுவில் இந்தியாவில் வாணிபம் செய்வதில் இருந்த ஆர்வத்தை டச்சுக்காரர்கள் இழந்தனர்.

இந்தக் கால அளவில் இந்திய அரசியல் அமைப்பிலும் குறிப்பாக தென் இந்திய அரசியல் அமைப்பிலும் அநேக மாற்றங்கள் ஏற்பட்டன. உள் நாட்டுப் பேரரசுகள் நீண்ட காலத்திற்கு

முன்பே மறைந்து விட்டன. தக்காணச் சுல்தான்களின் படையெடுப்பால் விஜயநகரப் பேரரசும் சிதறியது. அதனால் தென் இந்தியாவிலும் மொகலாய அரசு அமைய வழி ஏற்பட்டது. தென் இந்தியாவில் தனக்குச் சேர வேண்டிய வரியை வசூலிப்பதற்காக மொகலாயப் பேரரசர், ஆர்க்காட்டில் ஓர் ஆளுநரை நியமித்து, அவருக்கு கர்நாடக நவாப் என்று பெயரிட்டார். இக் காலத்தில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் முறையே சென்னையிலும், பாண்டிச்சேரியிலும் வலிவான வியாபாரத் தளம் அமைத்துக் கொண்டனர்.

அன்வாருதீன் (கி.பி. 1744—1749) என்ற கர்நாடக நவாப், டச்சுக்காரர்கள் காலி செய்யப்பட்ட கோவளம் கோட்டை நகரில் தனி ஆர்வம் காட்டினார். கடற்கரையை ஒட்டி, டச்சுக்காரர்களால் கட்டப் பெற்ற, பாழடைந்தபழையகோட்டைக்கு அருகிலேயே நவாப் ஒரு புதிய கோட்டையைக் கட்டினார். நவாப்பின் புதிய கோட்டைக்கு 'சதாத் பந்தர்' என்று பெயரிடப்பட்டது. இக்கோட்டையின் உதவியால், ஐரோப்பிய கடல் வாணிபக்காரர்களின் கப்பல் நடமாட்டத்தை அப்பகுதியில் கட்டுப்பாட்டிற்குள் வைத்திட நவாப்பால் முடிந்துள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுவில், சென்னையில் இருந்த ஆங்கிலேயர்களுக்கும், பாண்டிச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட விரோதம் கடுமையாக உருவெடுத்தது. இரு நவாப்புகளுக்கும் இடையே இருந்த விரோதத்தின் காரணமாக ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆகிய இரு சக்திகளும் பங்கு எடுத்துக் கொண்டன. பிரெஞ்சுக்காரர்கள் செங்கற்பட்டுக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டதுடன், கோவளம் கோட்டையையும் கைப்பற்றிட முடிவு செய்தனர். நவாப்பிடம் இருந்து, தங்கள் வலிமையின் மூலமாக அக்கோட்டையைக் கைப்பற்றிட பிரெஞ்சுக்காரர்களால் இயலவில்லை. எனவே, அவர்கள் தந்திரமாக அக்கோட்டையைக் கைப்பற்றிட முடிவு செய்தனர்.

பாண்டிச்சேரியில் இருந்து வந்த பிரெஞ்சுக் கப்பல் ஒன்று கோவளம் கடற்கரையில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அக் கப்பலில் உள்ளவர்கள் பேராபத்தில் சிக்கியுள்ளனர் என்பதை அறிவிக்கும் அபாயக் கொடிகள் பறக்க விடப்பட்டன. அதைக் கண்டு மனமிரங்கி, உதவி செய்வதற்காக பிரெஞ்சுக் கப்பலுக்குள் சென்ற இந்தியர்களிடம், ''இக் கப்பலில் இருந்தவர்களில் பலர் 'ஸ்கர்வி' நோயினால் இறந்து விட்டனர்; நோயினால் பாதிக்கப்பட்டு எஞ்சியுள்ள 30 பேர்களை கோட்டைக்குள் தங்க அனுமதியுங்கள்' என்று பிரெஞ்சுக் கப்பலில் இருந்தவர்கள் வேண்டினர். நோயாளிகளாக நடித்த 30 பேர்களும் ஆயுதங்களைத் தங்கள் உடைகளில் மறைத்து வைத்திருந்தனர். 30 பேர்களும் கோவளம் கோட்டையில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அன்று இரவு பிரெஞ்சுக்காரர்கள் தாங்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் கொண்டு, கோவளம் கோட்டையின் காவற்படையினரை வென்று, கோட்டையைக் கைப்பற்றினர். இவ்வாறாக 1750-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்களின் கோட்டையாக மாறியது.

உடனே சென்னையில் இருந்த ஆங்கிலேய அலுவலர்கள், கோவளத்தைப் பிரெஞ்சுக்காரர்களின் கையில் விட்டு வைத்திருப்பதில் உள்ள பெரும் தீங்கை உணர்ந்தனர். எனவே, கோவளம் கோட்டையில் இருந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டிட கிழக்கு இந்தியக் கம்பெனி முடிவு செய்தது. 1752-ஆம் ஆண்டில் லார்டு கிளைவ் (அப்போதைய கேப்டன்), 200 ஐரோப்பியர்கள் மற்றும் 500 சிப்பாய்களுடனும், 24 பௌண்டு குண்டுகளை வெடிக்கும் 4 பீரங்கிப் படையுடன் கோவளம் நோக்கிப் புறப்பட்டார். கோவளத்தில் இருந்த கோட்டைக்கு அகழி கிடையாது. ஆனால் 4 கோபுரங்களுடன் கூடிய வலுவான மதிற் சுவரைக் கொண்டிருந்தது. கோபுரங்களில் 30 துப்பாக்கிகள் இருந்தன. கோவளம் கோட்டைக்குள் இருந்த காவற்படையில் 50 பிரெஞ்சுக்காரர்களும், 300 சிப்பாய்களுமே இருந்தனர். கோவளத்தில் இருந்த பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியில் இருந்தும், செங்கற்பட்டில் இருந்த தங்கள் படையில் இருந்தும் உதவி எதிர்பார்த்தனர். ஆனால் அவர்கள் எங்கிருந்தும் உதவி பெற முடியவில்லை. தனித்து நின்று போரிடவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, கிளைவ் அவர்களால் நடத்தி வரப்பெற்ற படையினரிடமிருந்து இரக்கத்தை எதிர்பார்க்கும் நிலையில் பிரெஞ்சுப்படையினர் இருந்தனர். ஆகவே, பிரெஞ்சுத் தளபதி, 1752-ல் ஒரு குண்டு கூட வெடிப்பதற்கு முன்பாக கிளைவிடம் சரணாகதி அடைந்தார். அதனால் ஆங்கிலேயர்கள் பெரும் தொல்லை ஏதுமின்றி

## ஆசியாவிலேயே முதலாவது முதலைப் பண்ணை!


ஆசியாவிலேயே முதலாவது முதலைப்பண்ணை மாமல்லபுரம்—சென்னைச் சாலையில், மாமல்லபுரத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளது

கடந்த டிசம்பர் 5-ஆம் தேதியன்று ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்கள் இதனைத் திறந்து வைத்தார்.

பல்வேறு வகையான சுமார் 160 முதலைகள் உள்ள இந்தப் பண்ணையில் இனப் பெருக்கம் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக, சென்னை முதலைப் பண்ணையின் இயக்குநரான திரு விட்டேக்கர் கூறியிருக்கிறார்.

மாமல்லபுரம் வரும் உல்லாசப் பயணிகளின் வசதிக்காக முதன்முதலாக தமிழகச் சுற்றுலாத் துறை இரண்டு வழிகாட்டிகளை நியமித்திருக்கிறது. இங்கு, சுற்றுலாத் தகவல் நிலையம் திறக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் தமிழகம் வருகை தந்த உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் மாமல்லபுரம் சென்று சிற்பங்களைப் பார்வையிட்டதுடன் புகழ் பெற்ற ஸ்ரீ ஸ்தல சயனப் பெருமாள் கோவிலுக்கும் சென்று வழிபட்டார்.



கோட்டைக்குள் சென்று, வெகு எளிதில் அதைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயர்கள் அக்கோட்டையின் உள்ளே 50 பிரிட்டிஷ் பீரங்கிகள் இருந்திடக் கண்டனர். அப்பீரங்கிகள் பிரெஞ்சுத் தளபதி லாபௌண் டனர்ஸ் என்பவரால் சென்னையில் முன்பு கைப்பற்றப்பட்டவைக ளாகும். லார்டு கிளைவ் அப் பீரங்கிகளைக் கைப்பற்றிச் சென் னைக்கு அனுப்பி வைத்தார். அதன் பின்னர் லார்டு கிளைவ் செங்கற்பட்டுக் கோட்டையைத் தாக்கி, அதைக் கைப்பற்றிய துடன், பிரெஞ்சுக்காரர்களைப் பாண்டிச்சேரிக்குத் துரத்தினர்.

செங்கற்பட்டுக் கோட்டையின் காவற்படையைப் பலப்படுத்திய உடன், கோவளம் கோட்டையில் இருந்த பாதுகாப்புப் படையைக் கலைத்திடவும் கோவளம் கோட் டையை அழித்திடவும் லார்டு கிளைவ் ஆணையிட்டார். அவ் வாணைக்கு ஏற்ப, கோட்டையின் சுவர்கள் இடிக்கப்பட்டு தரை மட்டமாக்கப்பட்டன. கோவளம் கடற்கரையில், முன்பிருந்த கோட்டையின் இடிந்த சுவர்களை இன்றும் காணலாம். ஒரு கிறிஸ் தவ ஆலயமும், சில பழைய கட்டடங்களும் இன்றும் அங்கு நிலைத்து நிற்கின்றன. கோட்டை யில் இருந்த, பீரங்கிகளாலும் இடிக்கப்பட முடியாத பழைய கட்டடம் ஒன்றில் ஓர் அனாதை இல்லம் இயங்கி வருகிறது. கடந்த நூற்றாண்டின் இறுதியில் சென்னையில் புகழ் பெற்று விளங் கிய, 'டிமாண்டி அற்புத் நாட் அண்ட் கோ' என்ற வியாபாரக் கம்பெனியின் தலைவரான டி மாண்டி என்பவரின் நினைவாக இவ்வனாதை இல்லம் துவக்கப் பட்டுப் பல்லாண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது.

முன்பு கோட்டையாக இருந்த பகுதியில் தற்பொழுது எழில்மிகு சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல் ஒன்று மலர்ந்துள்ளது. இந்த நவீன ஹோட்டல் 'சதாத் பந்தர்' என்ற வரலாற்றுப் புகழ் மிக்க பழைய கோட்டையின் எஞ்சிய சுவர்களால் சூழப்பெற்று உள்ளது. அகழ்வாராய்ச்சி மேற் கொள்ளப் பெற்று, பழைய கோட்டைச் சுவர்கள் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு விருந் தாக்கப்பட்டுள்ளது.

தென்கடல் தீவுகளில் காணப் படுவது போன்ற அழகிய வளை வான கடற்கரைமகிழ்விடத்தைக் கொண்டுள்ளதாலும், இத்தகைய வளைவுக் கடற்கரை மகிழ்விடம் தென் இந்தியாவில் மிகவும் அரி தாகவே காணப்படுவதாலும், கோவளம் கடற்கரை மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நகர்ப்புற நாகரிகத்தால் மாறி விடாத ஓர் இந்தியக் கடற்கரைக் கிராமமாகவே கோவளம் இன் றும் திகழ்கிறது. இங்குள்ள ஹோட்டலில் மேல்நாட்டுச் சுற்று லாப் பயணிகள் விரும்பும் எல்லா வகையான வசதிகளும் அளிக்கப் படுவதுடன், கோவளம் கடற் கரையில் கடந்த கால வரலாற்று நினைவுகளுடன், மக்கள் நடமாட் டம் அதிகமில்லாத இடங்களில் அமர்ந்து இயற்கை எழிலை ரசிக்க முடிவதாலும், சாதாரண மக்க ளுடன் பழகி, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், தொழி லையும், பண்பாட்டையும் தெரிந்து கொள்ள முடிவதாலும், வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் கோவளம் கடற்கரையைக் காணக் குதூகலத்துடன் வரு கின்றனர்.

## கிழக்குக் கடற்கரையின் அரசி!



உடல் நலத்திற்கு உறு துணையாக அமையும் பருவ நிலைமை தொன்றுதொட்டே தரங்கம்பாடியில் நிலவி வரு வதால், தரங்கம்பாடி 'கிழக் குக் கடற்கரையின் அரசி' (The Queen of the Coromandel Coast) என்று கூறப் படுகிறது. உடலுக்கு நலமும், உள்ளத்திற்கு வலிவும் அளித்து உள்ளத்திற்கு உவ கையும் அளிக்கக்கூடிய 'ஓசோன்' (Ozone) என்னும் ஒரு வகைக் காற்று, தரங்கம் பாடியில் நிறைந்துள்ளது.

தரங்கம்பாடியில் உள்ள கோட்டை 1620-ஆம் ஆண் டில் டேனிஸ்நாட்டினரால் கட்டப்பட்டதாகும். இக் கோட்டை 1845ஆம் ஆண் டில் வெள்ளையரின் ஆட்சிக் குட்பட்டது வெள்ளையர் ஆட்சியில் தஞ்சை மாவட் டத்தின் தலைநகரமாக தரங் கம்பாடியே இருந்துள்ளது. அங்குதான் மாவட்ட ஆட் சித் தலைவர் அலுவலகமும், மாவட்ட முன்சீப் நீதிமன்ற மும் இருந்துள்ளது. இவ் வலுவலகங்களெல்லாம் 19-ஆம் நூற்றாண்டின் இறுதி யில்தான் தஞ்சாவூருக்கும், இதர இடங்களுக்கும் மாற் றப்பட்டுள்ளன.

தரங்கம்பாடியில் உள்ள "டான்ஸ்பெர்க்" (Dons-berg) கோட்டையிலிருந்து கடலைப் பார்த்தால், கோட் டையின் முன் உள்ள கடல் பகுதிசிவப்பு நிறமாகக்காட்சி யளிக்கிறது. இது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. விடு முறை நாட்களில் கோட்டை யின் முன்னுள்ள கடற்பகுதி யில் ஏராளமான பேர் குளித்து மகிழ்கின்றனர்.

# தென்னார்க்காடு மாவட்டத்தில்...



வரலாற்றுப் புகழ்மிக்க செஞ்சிக்கோட்டை

புராதனப் பெருமைமிக்க ஒரு மிகப் பெரிய கோயில், புகழ் பெற்ற ஒரு பல்கலைக் கழகம், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கோட்டை, சாதி, மத, இன வேறுபாடற்ற—''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற கொள்கையுடைய--சிறப்பான சமுதாய, அரசியல் அமைப்புக் கொண்ட—-ஒரு புதிய சமுதாயம் (Utopian Community), நாட்டின் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்று ஆகியவைகள் ஒருங்கிணைந்து உள்ளமை எந்த ஒரு சுற்றுலாப் பயணியையும் நிச்சயமாகக் கவரும் என்பது உறுதி. ஆயினும், இத்தகைய சுற்றுலாக் கவர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள நவீன நாகரிக வளர்ச்சியால், சீர்குலைவு அடையாத-தென்னார்க்காடு மாவட்டம் தன்னிடம் உள்ள சுற்றுலாக் கவர்ச்சிகள் பார்வையாளர்களை எந்த அளவுக்குக் கவர்ந்துள்ளன என்பதை உணராமலேயே இருக்கிறது. ஆம்! சுற்றுலாவைப் பொறுத்தவரையில் தன்னிடம் உள்ள பெருமைகளை உணர்ந்திடாத—கிராமியச் சூழ்நிலையிலே எது மிகவும் அழகுமிக்கது என்பதை அறியாத—ஒரு மாவட்டமாகவே தென்னார்க்காடு மாவட்டம் இருந்து வந்துள்ளது. ஆனால் தற்பொழுது சுற்றுலாச் செல்வதற்கு ஏற்றதொரு மாவட்டமாக மாறி வருகிறது.

### சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள்

### சிதம்பரம்

நடராஜப் பெருமானின் மிகப் பெரிய கோயிலைக் கொண்டுள்ளது. இக்கோயிலில் தான் இந்திய நாட்டியக் கலையின் பரமரகசியம் அனைத்தும் அடங்கியுள்ளது என்று கருதப்படுகிறது. நடராஜப் பெருமானைத் தரிசிக்க இந்தியா வெங்கிலும் இருந்து பக்தர்கள் நாள்தோறும் வருகின்றனர். நாட்டியக்கலையின் ரகசியத்தையும், தோன்றிய காலம் தெரியாத கோயிலின் தொன்மையையும், சிறப்பையும் அறிந்து கொள்ள விரும்பும் வெளிநாட்டினர் சிதம்பரம் கோயிலைப் பார்வையிட வெகு ஆர்வத்துடன் விரும்பி வருகின்றனர். ஆனி, மார்கழி ஆகிய மாதங்களில் சிதம்பரத்தில் நடைபெறும் தரிசனத் திருவிழாவிற்கு நாடெங்கிலுமிருந்து இலட்சக் கணக்கானவர்கள் வருகை தருகின்றனர்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

முதல் நவீன இந்தியப் பல்கலைக் கழகம் என்ற பெயரைப் பெற்றுள்ள இது, தமிழகத்தின் பெருமையையும், தமிழ்மொழியின் சிறப்பையும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கும், கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்களுக்கும் இப்பல்கலைக் கழகம் நல்விருந்தாக அமைந்துள்ளது.

### செஞ்சிக்கோட்டை

செஞ்சிக்கோட்டை என்றதுமே தேசிங்கு ராஜன் நம் நினைவுக்கு வருகின்றான். சோழ, விஜயநகர, மராட்டிய அரசர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் போர்க்களமாக விளங்கிய செஞ்சிக் கோட்டை வரலாற்று நினைவுச் சின்னங்கள் அடங்கிய சுற்றுலா இடமாக விளங்குகிறது.

### ஆரோவில்

பாண்டிச்சேரிக்கு அருகே, ''யாதும் ஊரே, யாவரும் கேளீர்! என்ற பரந்தமனப்பான்மையுடன் வாழும் மக்களைக் கொண்ட அனைத்துலக அமைதி நகரம் இது. இங்கு அறவியலும், அறிவியலும் பின்னிப் பிணைந்து வளர்ந்து வருகிறது. அரவிந்தர் ஆசிரமத்தின் முயற்சியால் உருவாகி, உலக ஒருமைப்பாட்டிற்கு வழிவகுக்கும் இந்நகரை அனைவரும் காண வேண்டியது அவசியமாகும்.

### நெய்வேலி

நிலக்கரிச் சுரங்கத்தையும், இந்தியாவின் மிகப் பெரிய அனல் மின் நிலையத்தையும், யூரியா இரசாயன உற்பத்தி நிலையத்தையும் பெற்றுள்ள இந்நகரம் கல்விச் சுற்றுலா செல்வோர் கண்டிப்பாகக் காண வேண்டிய இடமாகும்.

### திருவக்கரை

இங்கு இயற்கையிலேயே அமைந்த கல்மரப் பூங்கா உள்ளது. இங்கு பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த மரங்கள் காலவெள்ளத்தால் கல் மரங்களாக மாறியுள்ள காட்சி, சுற்றுலாப் பயணிகளைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

### பிச்சாவரம்

கடல்சார்ந்த காடுகள் நிறைந்த பகுதியாக விளங்கும் பிச்சாவரம் காடு, சுற்றுலாப் பயணிகளின் உள்ளம் கவர்வதாக அமைந்துள்ளது. இக்காடு விரைவில் இந்தியாவின் 'டிஸ்னி லாண்டு' என்று சொல்லத்தக்க அளவில் கவர்ச்சி மிகு நல்லதோர் சுற்றுலா இடமாக வளர்ச்சியடையும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

# மற்ற மாவட்டங்களில்...

## புதுக்கோட்டை மாவட்டம்

தமிழ்நாட்டின் புதிய மாவட்டமாக விளங்கும் புதுக்கோட்டை மாவட்டமும் பல சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. புதுக்கோட்டையில் உள்ள அரண்மனை, அரும்பொருட்காட்சியகம் ஆகியவை சுற்றுலாப்பயணிகளைக் கவரத்தக்கவைகளாக உள்ளன.

திருக்கோகர்ணம், சித்தன்ன வாசல், குடுமியான்மலை ஆகிய இடங்களில் உள்ள மலைக்குகைகளில் காணப்படும் சிற்பங்களும், ஓவியங்களும் புகழ் வாய்ந்தவைகளாகும். திருமயம் மலைக்கோட்டையும் சுற்றுலாப் பயணிகள் காணத்தக்க இடமாகும். குடுமியான் மலையில் உள்ள வேளாண்மைப் பண்ணை, உழவர் சுற்றுலாவுக்கு ஏற்றதாகும்.

## திருநெல்வேலி மாவட்டம்

இயற்கை எழில் நிறைந்த மாவட்டமாகத் திருநெல்வேலி திகழ்கிறது. திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் ஆலயம் சிற்பக்கலைக்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர், முக்கிய புனிதத் தலமாகத் திகழ்கிறது. பொன் மணற் கடற்கரையில் அமைந்துள்ள முருகன் கோயிலின் சுவர்களில் கடலலைகள் வீசுவதாலேயே திருச்செந்தூருக்குத் 'திருச்சீரலைவாய்' என்ற பெயரும் உள்ளது. அடுத்தடுத்து வந்து வீசும் அலைகள் முருகனுக்கு இசைபாடுவதுபோல் இருக்கிறது. இவ்வரிய காட்சியைக் கண்டு களிக்கவும், கடலில் குளித்து மகிழவும், முருகனைத் தரிசிக்கவும், மக்கள் அலையெனத் திரண்டு, திருச்செந்தூருக்கு வருகின்றனர்.

ஆழ்வார் திருநகரி, நாங்குநேரி, ஆதிச்சநல்லூர், கொற்கை, கிருஷ்ணபுரம், கழுகுமலை ஆகிய இடங்களில் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன.

மூன்றடைப்பு என்ற இடத்தில் உள்ள பறவைகள் சரணாலயமும், முண்டந்துறையில் உள்ள புலிகள் சரணாலயமும், பாபநாசம் அணையும் திருநெல்வேலி மாவட்டத்தின் இயற்கை அழகை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இவை அனைத்தையும் விட இயற்கையின் அற்புதமாக விளங்குவது குற்றாலம் அருவியே! குற்றாலம் அருவியிலே குளிப்பது போல், வேறு ஒரு சுகம் காண முடியாது!



## கோவை மாவட்டம்

கோவை நகருக்கு அருகேயுள்ள பேரூர், சிற்பங்கள் நிறைந்த புனிதத் தலமாக விளங்குகிறது. பவானி, அவிநாசி ஆகியவையும் புனிதத் தலங்களாகும்.

கோவைக்கு அருகேயுள்ள மருதமலை முருகன் கோயில் அண்மைக் காலத்தில் கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலமாக உருவாகியுள்ளது.

பவானி சாகர் அணை, ஆளியாறு அணை, பரம்பிக்குளம் அணை, சிறுவாணி அணை ஆகியவைகள் மகிழ்வு உலாச் செல்வதற்கு ஏற்ற இடங்களாக உள்ளன.

## வடஆர்க்காடு மாவட்டம்

வடஆர்க்காடு மாவட்டம் புகழ்பெற்ற புனிதத் தலத்தையும், புகழ் பெற்ற கோட்டைகளையும் கொண்டுள்ளது போலவே, கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலங்களையும் கொண்டுள்ளது.

தென் இந்தியாவின் மிகப் பெரிய கோயில்களில் ஒன்றான அருணாசலேஸ்வரர் கோயில் திருவண்ணாமலையில் உள்ளது. 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோயிலின் கோபுரம் 200 அடி உயரமும், 11 மாடிகளும் கொண்டது. இதன் அருகில் புனிதமலை ஒன்று உள்ளது. அம்மலையின் மீதுதான் கார்த்திகைத் தீபம் ஏற்றப்படுகிறது. இம்மலையடிவாரத்தில் ரமண ரிஷியின் ஆஸ்ரமம் உள்ளது. இது உலகப் புகழ்பெற்றதாகும்.

வேலூர்க் கோட்டை, சாத்தனூர் அணை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, அமிர்திக் காடு ஆகியவை சுற்றுலாச் செல்வதற்கு ஏற்ற இடங்களாகும்.

## சேலம் மாவட்டம்

கனிமங்கள் நிறைந்த சேலம் மாவட்டம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கவல்லதாகவும் உள்ளது. இம்மாவட்டத்தின் முக்கிய கவர்ச்சிமிகு சுற்றுலா இடமாக ஏர்க்காடு விளங்குகிறது.


இயற்கை எழில்களையும் இனிமை பயக்கும் காலநிலைமையையும் கொண்டதாக உள்ள கொல்லிமலை நல்லதோர் சுற்றுலா இடமாக உருவாகி வருகிறது.

மேட்டூர் அணை மகிழ்வு உலாவுக்கு ஏற்ற இடமாகும்.

நாமக்கல், திருச்செங்கோடு, தாரமங்கலம், சேலம் மாரியம்மன் கோயில் ஆகியவை புனிதத் தலங்களாகும்.

'சங்கரிதுர்க்' என்ற இடத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோரின் கோட்டையைக் கண்டு மகிழலாம்.

# தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள்



# வனவிலங்கு ரசிகர்களுக்கு....



காட்டு வளமே நாட்டு வளம் என்பதனை நாமறிவோம். இயற்கை எழில் கொஞ்சும் காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது தமிழக அரசு.

தொழில்களுக்கான மூலப் பொருள்களை வழங்கும் காடுகளையும், அங்கே வசித்து வரும் விலங்குகளையும் பாதுகாத்து வருவது அரசின் கடமை மட்டுமன்று, நம்முடைய கடமையும் ஆகும். தமிழ்நாட்டில் காடுகள் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,400 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,228 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட காடுகளும் 3,812 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்படாக் காடுகளும் ஆகும்.

தமிழ்நாட்டில் பல்வேறு வன விலங்குகளும், பன்னிறப் பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன. செய்தித் தாள்களிலும், இதழ்களிலும் பார்த்து மகிழும் வனவிலங்குகளையும், அழகிய பறவைகளையும் நேரில் காண நமக்கெல்லாம் ஆர்வம் எழுவது இயல்புதானே?


அந்த ஆர்வத்தை—ஆசையை நிறைவேற்றி வைக்கிறது தமிழ்நாடு வனத் துறை. வனவிலங்குகளையும், பறவைகளையும் கண்டு மகிழ்வதற்காகத் தமிழ்நாட்டில் மிகப் பெரிய வனவிலங்கு உய்விடங்கள் உள்ளன. அவை :

1. முதுமலை வனவிலங்கு உய்விடம்.
2. வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம்.
3. கிண்டி மான் பூங்கா.
4. முண்டந்துறை புலி உய்விடம்.
5. கோடிக்கரை வனவிலங்கு உய்விடம்.
6. ஆனைமலை வனவிலங்கு உய்விடம்.
7. களக்காடு சிங்க வால் குரங்கு உய்விடம்.

**1. முதுமலை வனவிலங்கு உய்விடம்**

மிகப் பெரிய வனவிலங்கு உய்விடங்களில், நீலகிரியிலுள்ள முது

முதுமலைக் காட்டிலே, காட்டெருமைகள் கூட்டம்



மலை வனவிலங்கு உய்விடமும் ஒன்று. இதற்கு அடுத்தடுத்து கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பந்திப்பூர் வனவிலங்கு உய்விடமும், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயநாடு வனவிலங்கு உய்விடமும் உள்ளது குறிப்பிடத் தக்கதாகும். ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில்உள்ளது முதுமலை. ஆண்டுதோறும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் நூற்றுக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த உய்விடத்தைக் கண்டு களிக்கத் தவறுவதில்லை.

*320.68* சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்த உய்விடத்தில் அரிய விலங்குகள் காணக் கிடக்கின்றன. முதுமலைக் காட்டுக்குள் நுழைகிறோம்! அதோ! நானூற்றுக்கும் மேற்பட்ட மான்கள் ஓடி வருகின்றனவே! அந்தப் பக்கம் இருபது அல்லது முப்பது காட்டெருமைகள் திரிகின்றனவே! அங்கே வருவதென்ன, ஓ, ...யானைக் கூட்டமா?

இந்தக் கண்கொள்ளாக் காட்சியை நாம் ஒரே சமயத்தில் பார்க்க முடியும் இங்கே!

ஏப்ரல் மாதத்தின் இரவுகளில் இலட்சக் கணக்கான மின்மினிப் பூச்சிகள் தாரகைகள் போல் மின்னுவதைக் காணக் கண் கோடி வேண்டும்! அது மட்டுமா? வகை வகையான வண்ணத்துப் பூச்சிகள் இங்கும் அங்கும் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து திரிவதையும் நாம் காணத் தவறக்கூடாது. முதுமலை வனவிலங்கு உய்விடத்திலுள்ள காட்டெருமைகளின் (Indian Bison) பழக்க வழக்கங்கள் பற்றி வெளிநாட்டு உயிரியல் நிபுணர்கள் பலர் ஆராய்ந்து வருவது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

மிகத் தொன்மையான வன விலங்குகளில் ஒன்றான 'எறும்பு தின்னி'யையும் இங்கே காணலாம். இது இரவில் மட்டுமே



முதுமலை வனவிலங்கு
சரணாலயத்தில் யானைமேல்
அமர்ந்து சுற்றிப்பார்க்கலாம்.

நடமாடும் வழக்கமுடையதாம்! இங்கே காட்டு நாய்களைக் காண்பது அரிதல்ல. புலி, சிறுத்தைப் புலி, குள்ள நரி, கழுதைப் புலி (Hyaena), கீரிப் பிள்ளை, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, காட்டுப் பன்றி, கிளை மான், புள்ளி மான், உடும்புகள், மலைப் பாம்புகள் ஆகியவை முதுமலையில் காணப் படுகின்றன.

**போக்குவரத்து வசதிகள்**

இந்த உய்விடத்திற்கு அண்மையிலுள்ள விமான நிலையம், கோயம்புத்தூர். இது முதுமலையிலிருந்து 160 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அண்மையிலுள்ள இரயில்வே நிலையங்கள் : 1. உதக மண்டலம்—64 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. 2. மைசூர்—95 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. உதகமண்டலத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் பஸ் வசதிகள் உள்ளன.

இவை தவிர முதுமலைக்குச் செல்ல வனத் துறையின் சார்பில் 20 பேர் உட்காரக் கூடிய 'வேன்' 20 பேர், 10 பேர் உட்காரக் கூடிய 'மினி' பஸ்கள், மற்றும் ஜீப்கள் உள்ளன.

இடவசதிகள் : (1) அபயாரண்யம் ஓய்வு இல்லம்—இரண்டு அறைகள் கொண்டது. (2) சில்வன் லாட்ஜ்—4 அறைகள் கொண்டது. (3) தெப்பக்காட்டிலுள்ள 'லாக்அவுஸ்'—3 அறைகள் கொண்டது. (4) மசின குடியிலுள்ள 'லாக் அவுஸ்'—3 அறைகள் கொண்டது. (5) கூடார வசதிகள்.

**2. வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம்**

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நீர்ப் பறவைகள் உய்விடங்களில் இதுவும் ஒன்று. சென்னை நகரிலிருந்து 83 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது வேடந்தாங்கல் என்னும் கிராமம். இது கருங்குழி இரயில் நிலையத்திற்கு 8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது.

வேடந்தாங்கல் நீர்ப் பறவைகள் உய்விடம், அழகிய நீர்ப் பரப்புள்ள ஏரியாகும். இதன் பரப்பளவு *29.94* ஹெக்டேர் ஆகும். ஏரியின் நடுவே 500க்கும் மேற்பட்ட கடப்ப மரங்கள் அடங்கிய தோப்பு உள்ளது.

கி.பி. 1798-ஆம் ஆண்டில் இங்கே ஏரி நடுவில் ஒரு கடப்ப மரத் தோப்பு இருந்தது என்றும், அதில் நீர்ப் பறவைகள் வந்து தங்கிக் கூடு கட்டின என்றும், இப்பறவைகளை ஊர் மக்கள் பாதுகாத்து வந்தனர் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

இங்கே வந்து கூடு கட்டி வாழும் பறவைகளின் பெயர்களைக் கேட்டால் விந்தையாக இருக்கும். நத்தைக் குத்தி நாரை, கங்கணம், நீர்க் காக்கை, வெண் கொக்கு, மத்தாளிக் கொக்கு, பாம்புத் தாரா, மஞ்சள் நிற அலகுள்ள உண்ணிக் கொக்கு, இளம் வக்கா, வயது வந்த வக்கா, துடுப்பு மூக்கு நாரை, நாமக் கோழி, முக்குளிப்பான், சிறவி—இப்படிப் பலப் பல பறவை இனங்கள் பலப் பகுதிகளிலே இருந்து

இங்கே வந்து ஒன்று கூடுகின்றன. இப்படி ஆண்டுதோறும் ஏறத் தாழ 30 ஆயிரம் பறவைகள் இங்கே வந்து தங்கி, குஞ்சு பொரிக்கின்றன!

இந்தியா தவிர வெளிநாடுகளி லிருந்தும் பல்வேறு பறவைகள் வேடந் தாங்கலுக்கு வருவதாகக் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் அக்டோபர்—நவம்பர் முதல் மார்ச் வரை இங் குப் பறவை இனங்கள் பெருங்கூட் டமாய் வந்து கூடுவதும், அவை எழுப்பும் 'கல கல' ஒலியும் மனத்துக்குத் தெம்பூட்டுவன.

**போக்குவரத்து வசதிகள்**

அண்மையிலுள்ள விமான நிலையம் : சென்னை மீனம்பாக்கம் —70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அண்மையிலுள்ள இரயில் நிலையம் : கருங்குழி—8 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இங் கிருந்து பேருந்து வசதி இல்லை. சென்னையிலிருந்தும், செங்கற்பட் டிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

இட வசதி : வனத் துறையின ரின் ஓய்வில்லம்—நான்கு அறை கள் கொண்டது.

## 3. கிண்டி மான்கள் பூங்கா

ஒரு பெரு நகரின் எல்லைக்குள் அமைந்துள்ள இத்தகைய பூங்கா, இந்தியாவிலேயே இது ஒன்று தான்!

இயற்கை அழகு மண்டிக் கிடக்கும் இந்தப் பூங்கா 231 ஹெக்டேர் பரப்பளவுள்ளது.

1959-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு நாளில், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது, மேலை நாட்டு வனத் துறை வல்லுநர் களால் பாராட்டப் பெற்ற இந்த 'இயற்கைக் காட்டில்' விலங்குக் காட்சிச்சாலையில் இல்லாத அரிய பிராணிகளும் உள்ளன. இந்தி யாவைத் தவிர உலகில் எங்குமே இராத கறுப்பு மான்கள் எனப் படும் இந்திய மான் வகை இந்தப் பூங்காவில் உள்ளது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். இமாலயக் காட்டுக் கோழிகள், சிறுத்தை, பறக்கும் அணில், சிங்க வால் குரங்கு, மலைப்பாம்பு ஆகியவை நம்மை மலைக்க வைக்கும்.

அழகிய பறவைகள், மயில், மைனா, வகை வகையான கறுப்பு, வெள்ளை புள்ளி மான்கள், காட்டு ஆடு முதலியனவும் பாம்புப் பண்ணை ஒன்றும் இங்கே உள்ளன.

குழந்தைகள் முதல் பெரிய வர்கள் வரை கண்டு களித்திடும் வண்ணம் அமைந்துள்ள இந்த மான்கள் பூங்காவுக்கு அருகில் சிறுவர் பூங்கா, ராஜ பவனம், காந்திமண்டபம், ராஜாஜி நினைவு மண்டபம், காமராஜ் நினைவு மண்டபம் ஆகியவை உள்ளன.

**போக்குவரத்து வசதிகள்**

அண்மையிலுள்ள விமான நிலையம் : சென்னை மீனம்பாக்கம். —12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அண்மையிலுள்ள இரயில் நிலையம் : கிண்டி. மற்றும் வட பகுதியிலிருந்து வருபவர்கள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலை யத்திலும், தென் பகுதியிலிருந்து வருபவர்கள் எழும்பூர் இரயில் நிலையத்திலும் இறங்க வேண்டும்.

சென்னை நகர எல்லைக்குட் பட்ட பேருந்துகள் பல, இப் பூங்காவிற்குச் செல்கின்றன.

## 4. கோடிக் கரை வனவிலங்கு உய்விடம்

கோடிக்கரை அல்லது கோடைக் காடு என்னும் இந்த உய்விடம், தஞ்சை மாவட்டத்திலுள்ளது. 17.29 சதுர கிலோ மீட்டர் பரப் பளவுள்ளது. இங்கே பயணம் செய்வது இனிமையானது, ரம்மிய மானது.

கறுப்பு மான்கள், புள்ளி மான்கள், காட்டுப் பன்றிகள் முதலியன இங்கே காணக்கிடக் கின்றன. இவையன்றிக் கூட்டங் கூட்டமாய்த் திரியும் நாரை போன்ற பெரிய சிவப்பு நீர்ப் பறவைகளை இங்கே முக்கியமாய்க் காணலாம். ஆண்டுதோறும் குளிர்காலத்தில் இந்தப் பறவை கள் ஆயிரக் கணக்காக இங்கே வந்து கூடும். இந்தக் காலங்களில் இந்த அழகிய பறவைக் கூட்டங் களை ஒரே சமயத்தில் நாம் கண்டு களிக்கலாம்.

வசந்த காலத்தில் மரஞ்செடி கொடிகள் கண்ணுக்குக் கவர்ச்சி யாய்க் காட்சியளிக்கும்; மைனா போன்ற பறவைகளை இக்காலம் கவர்ந்திருக்கும்.

**போக்குவரத்து வசதிகள்**

அண்மையில் திருச்சிராப்பள்ளி விமான நிலையம் உள்ளது.

தென்னிந்திய இரயில்வேயின் மாயவரம்—திருத்துறைப் பூண்டி பிரிவில் கோடிக்கரையில் இரயில் நிலையம் ஒன்றும் உள்ளது.

தஞ்சையிலிருந்தும், மாயவரத் திலிருந்தும் பேருந்து வசதிகள் உண்டு.

இடவசதி : இரண்டு அறைகள் கொண்ட வனத் துறையின் ஓய்வு இல்லம் இங்கே உள்ளது.



## 5. முண்டந்துறை புலிகள் உய்விடம்

முண்டந்துறை புலிகள் உய்விடம்தான், இந்தியாவிலேயே முதன் முதலாகப் புலிகளுக்கென உருவாக்கப் பெற்ற உய்விடமாகும்.

இந்த உய்விடம் திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறையில் அதாவது அம்பாசமுத்திரம் இரயில் நிலையத்திலிருந்து 10. கி.மீ. தூரத்தில் உள்ளது. இதன் பரப்பளவு 520 சதுர கிலோ மீட்டர்கள்.

இங்கே புலி தவிர சிறுத்தை ஓநாய், சாம்பூர் காட்டுப் பன்றி, கருங்குரங்கு ஆகிய விலங்குகளும் உள்ளன. திருநெல்வேலி வடக்கு,தெற்குக்கோட்டங்களைச் சார்ந்த சிங்கம்பட்டி மற்றும் பாபநாசம் போன்ற இடங்களில் ஒதுக்கப்பட்டுள்ள காடுகளில் சுமார் 200 சதுர மைல்கள் வரை இந்த உய்விடம் பரவியுள்ளது.

ஜனவரியிலிருந்து செப்டம்பர் வரை இங்கே கண்டு களிப்பதற்கான ஏற்ற பருவ காலமாகும்.

இந்த உய்விடத்தில், புலிகளுக்குக் கடுமையான பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்து வசதிகள்

**அண்மையிலுள்ள விமான நிலையங்கள்:** கேரளாவிலுள்ள திருவனந்தபுரம்—160 கிலோ மீட்டர், தமிழ்நாட்டிலுள்ள மதுரை—192 கிலோ மீட்டர். இங்கிருந்து 5 மணி நேரத்தில் இந்த உய்விடத்திற்குச் செல்லலாம்.

**அண்மையிலுள்ள இரயில் நிலையம்:** அம்பாசமுத்திரம்—10 கிலோ மீட்டர்.

அம்பாசமுத்திரத்திலிருந்து பேருந்து வசதிகளும் உண்டு.

இவையன்றி, இந்த உய்விடத்தை ஒரு முறை சுற்றிக் காண்பிக்க வனத் துறை தக்க ஏற்பாடு செய்துள்ளது.

**இட வசதி:** இரண்டு அறைகள் கொண்ட வனத் துறையின் ஓய்வில்லம் ஒன்றுள்ளது.

## 6. ஆனைமலை வனவிலங்கு உய்விடம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள இந்த உய்விடம் 958 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளது.

இந்த உய்விடத்தில் யானைகள், காட்டெருமைகள், புலிகள், சிறுத்தைகள், காட்டு நாய்கள், கறுப்பு வரிகளுள்ள முயல்கள், பறக்கும் அணில், இராட்சத அணில்கள், நீண்ட வால் குரங்குகள், நீண்ட கொம்புகளையுடைய மலை ஆடுகள் முதலான விலங்குகளை நாம் காணலாம்.

### போக்குவரத்து வசதிகள்

**அண்மையிலுள்ள விமான நிலையம்:** கோயம்புத்தூர்—80 கிலோ மீட்டர்.

**அண்மையிலுள்ள இரயில் நிலையம்:** பொள்ளாச்சி—35 கிலோ மீட்டர். கோயம்புத்தூரிலிருந்தும், பொள்ளாச்சியிலிருந்தும் பரம்பிக் குளம் அணை வரை பேருந்துகள் செல்கின்றன.

இங்கே பயணிகள் தங்குவதற்கான இட வசதிகளும் உள்ளன. டாப் ஸ்லிப்பிலுள்ள வனத்துறை ஓய்வு இல்லம்—உணவு வசதிகள் கொண்ட 6 அறைகள் கொண்டது. வரகலியாறு ஓய்வு இல்லம்; காட்டின் உட்புறம் உள்ளது. இங்கே உணவு வசதி இல்லை. மவுண்ட் ஸ்டுவர்ட் ஓய்வு இல்லம்; **உணவு வசதி** உள்ள 2 அறைகள் கொண்டது.

## 7. களக்காடு வனவிலங்கு உய்விடம்

சிம்ம வால்களைக் கொண்ட கருங் குரங்குகளைப் பாதுகாப்பதே, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு வனவிலங்குச் சரணாலயத்தின் முக்கிய நோக்கமாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு உச்சிச் சரிவில் களக்காடு வனம் உள்ளது. இந்த இடத்தில்தான் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் சந்திக்கின்றன. இப்பகுதியில் கரடி, சிறுத்தை, கடமான்கள், மலைப் பாம்பு முதலியவை வசிக்கின்றன.

தென்னிந்தியாவில் வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரம் நிறைந்த பசுமையான காடுகளில் பண்டைக் காலம் இக்குரங்கு



சாதாரணமாகக் காணப்பட்டது. ஆனால், அண்மைக் காலத்தில் இது மிகவும் அரிதாகிப் போய் விட்டது. காரணம் இதன் இறைச்சி தாதுபுஷ்டி மருந்து தயாரிப்பதற்குச் சிறந்த ஒன்று என்பதற்காக இது வேட்டையாடப்பட்டது. இதன் கருமை நிற பளபளப்பான உரோமமும் இது கொல்லப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

இந்த அரிய வன விலங்கினத்தைப் பாதுகாக்கும் வகையில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளில் ஒரு உய்விடத்தை அமைப்பதில் மத்திய அரசும், தமிழ் நாடு அரசும் தீவிர அக்கறை எடுத்துக் கொண்டன.

சிம்மவால் கருங் குரங்கு இருண்ட நிறமும், வெட்கப்படும் தன்மையும் கொண்டது! வெளியே அதிகமாக வராது.

இக் குரங்குகள் வழக்கமாக 12 முதல் 20 பிராணிகள் கொண்ட கூட்டமாகத்தான் எங்கும் செல்கின்றன.

களக்காடு, பாபநாசம், வீரப்புலி 'ரிசர்வ்' காட்டுப் பகுதிகளில் இத்தகைய குரங்குகளின் எண்ணிக்கை தற்போது சுமார் 400 மட்டுமே உள்ளன.

இந்த வனத்தில் சிம்ம வால் கருங் குரங்கைத் தவிர புலி, வேங்கை, கருஞ் சிறுத்தை, குள்ள நரி, காட்டு நாய்கள், யானைகள், கட மான்கள், 'சீத்தல்' மான், எலி மான், குரைக்கும் மான், நீல மான் வகைகள் வசிக்கின்றன. இவை தவிர மலைப் பாம்பு, ராஜ நாகங்கள், உடும்பு வகைகளும் உள்ளன. இக்காட்டில் பல வகையான பறவைகளுக்கும் குறைவில்லை.

இந்த வகை விலங்கினத்தின் வாழ்க்கை வரலாறு, உடற்கூறு, உணவுப் பழக்கங்கள் மற்றும் இனப் பெருக்கத் தன்மைகள் குறித்து ஆய்வு நடத்தப்படவும் இருக்கின்றன.

எனவே, வன விலங்குகளை, பறவைகளைக் கண்மூடித் தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் சுடுதல், பொறி வைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் முதலிய தீயச் செயல்களிலிருந்து பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் 'வனவிலங்கு உய்விடங்கள்' முக்கியமான பங்கை வகிக்கின்றன. அதோடு சுற்றுலாப் பயணிகளையும் இவை வெகுவாகக் கவர்கின்றன.

**விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!**









| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |









வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

"நாம் அனைவரும் இந்தியக் குடிமக்கள். இருப்பினும் நம்மிடையே பெருமளவில் ஏற்றத்தாழ்வுகள் நிலவி வருகின்றன. கடந்த காலத்தில் எவரது வளர்ச்சியும், முன்னேற்றமும் மறுக்கப்பட்டனவோ அவர்களை முன்னேற்றவும், ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட முயற்சிப்பதும் நம் அனைவருடைய கடமையாகும். அரிசன, ஆதிவாசி சகோதர, சகோதரிகள் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுமளவில் மிக அதிக, உயர்ந்த நிலைகளில் அமர்த்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்வேன்."

—பிரதமர் இந்திரா காந்தி




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.